723

Reg. No. M. 1354

போதனா விஷய பூங்கொத்து

மாதமோருமுறை மலரும்.

OFFICE OF THE REGISTRAR ...
11 MAY 1940
MADRAS



கொத்து 30

மலர் 10, 11

Editor & Publisher:

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

15 ஏப்பிரல்-மே 1940

...னாமுறை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

... 1. தனிப்பிரதி அணா 1¼.

N40.30.10-11
182292

BODHANA VISHAYA POONGOTHU

Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	217
2.	சென்னை ஆரம்பக்கல்வி இலாகா திருத்த விதிகளின் சாராம்சம்	220
3.	காவியத்தில் ஓவியம்	223
4.	Home work (வீட்டப்பியாசம்)	225
5.	பாடக் குறிப்பு	228
6.	நான் யார்?	231
7.	"மாடர்ண்" திருவள்ளுவர்	232
8.	அபிநயப்பாட்டு	234
9.	விடுமுறை நாட்களில் எச்சேவை நமது லக்ஷியம் ...	235
10.	பாடசாலை நிகழ்ச்சிகள்	238
11.	பெற்றோர் சங்க திறப்பு விழா	240
12.	விண் கற்கள் (Shooting Stars)	241
13.	பாப்பரசர் மகுடாபிஷேக கொண்டாட்டம் ...	243
14.	திருச்சி திருக்குடும்ப போதனைமுறை பாடசாலை பழைய மாணவர் சங்கம்	244
15.	யோசனைக்கணக்குகள் விடை	248

Imprimatur: ✠ JAMES,
Bishop of Trichinopoly.

தேவை! ஏஜெண்டுகள் தேவை!

எமது "போதனைவிஷயப் பூங்கொத்து" பத்திரிகையை எங்கள் பிரதிநிதிகள் ஏற்கனவே இல்லாத இடங்களிலும், ஆசிரியர் சங்கங்களிலும் விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை. கமிஷன் தாராளம். விபரத்திற்கு பின்வரும் விலாசத்திற்கு ஒரு அணா ஸ்டாம்புடன் உடனே எழுதவும்.

பத்திராதிபர்,
போதனைவிஷயப் பூங்கொத்து,
R. C. போதனைமுறைப் பாடசாலை, திருச்சி.

பாலர் சன்மார்க்க வாசகம்

இப் புத்தகம் எதற்காக?

பராபர வஸ்துவாகிய ஏகக் கடவுள் மட்டில் பொதுவாக யாவருக்குமுள்ள விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள இச்சிறு புத்தகம் மக்கள் யாவரும் அநுஷ்டிக்கவேண்டிய சில கடமைகளை விளக்கிக் காட்டுகிறது. பள்ளிச் சிறுவர்களை தெய்வ பயமுள்ளவர்களாகவும், கட்டுக் கடங்கினவர்களாகவும், தங்களால் செய்யக்கூடிய நன்மையெல்லாம் பிறருக்கு செய்கிறவர்களாகவும் ஆக்குவதே இதன் நோக்கம். ஆயினும் கடவுள் நம்மிடம் அதிகம் கேட்பாரானால் இதுமட்டும் பற்ருது.

விலை : 9 பைசா. தபாற் செலவு : 6 பைசா.

அறநெறி மார்க்கம் அல்லது

மனிதனின் அதிமுக்கிய அலுவல்

சங். ஜே. ஜேகநாத சுவாமிகள்
ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்து எழுதிய
அருமையான புஸ்தகம்

கடவுள் ஒருவர் உண்டென்று அங்கீகரிக்கும் எம்மதத்தினருக்கும் பொதுவான நன்மார்க்க போதனைகளடங்கியது.

நமது ஜீவிய காலத்தின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் நடந்துகொள்ள வேண்டிய வழியைக் காட்டும் உத்தம நண்பன்.

பக்கம் 189. விலை 8 அணா.

தபாற் செலவு 2 அணா 6 பை.

முக்கிய கவனிப்பு

பைண்டிங் சார்ஜ் பிரத்தியேகம்.

ஆரம்ப பாடசாலைகளுக்கு

புதிய ரெஜிஸ்டர்கள்

Record Sheet குறிப்பு ஏடு

சைஸ் $8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$

100 ஷீட்டுகள் விலை அணா 10 மட்டும்.

MONTHLY RETURN

மாதாந்தரக் கணக்கு

சைஸ் $8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$

100 ஷீட்டுகள் அணா 10.

12 ஒரிஜினல் 12 டியூபிலிகேட்

24 கடுதாசிகள் கொண்ட ஒரு புஸ்தகத்தின்

விலை அணா 2—6.

தபாற் செலவு „ 1—9.

Stagnation Register Sheets

தேங்கல் ரெஜிஸ்டர் ஷீட்டுகள்

12 ஷீட்டுகள் ரூ. 0—6—0.

600 பிள்ளைகள் வரைக்கும் எழுதக்கூடியது.

சைஸ் $20'' \times 15''$ தபாற் செலவு பிரத்தியேகம்.

Apply to: St. Joseph's I. S. Press, Trichinopoly.

விலை குறைக்கப்பட்டிருக்கிறது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 MAR 1940
MADRAS

போதனா விஷயப் பூங்கொத்து

கொத்து 30] 15 ஏப்பிரல்-மே 1940 [மலர் 10, 11

பத்திராதிபர் குறிப்புகள்

பழைய மாணவர் சங்கம்

சென்றமாதத்திய "பூங்கொத்தில்" பழைய மாணவர் சங்கத்தின் அவசியம், ப்ரயோஜனம் முதலியவற்றைப்பற்றிக் குறிப்பிட்டதற்கேற்ப, பல பழைய மாணவர்கள் பற்பல இடங்களிலிருந்து வெகு உற்சாகத்தோடு எம்மைக் கேட்டுக்கொண்டதின்பேரில் ஷெ சங்கம் 4-3-'40-ல் துவக்கப்பட்டது. அதன் முழு விவரங்களையும் மற்றோரிடத்திற் காண்க. அவ்வமயம் கூடியிருந்த எமது பழைய மாணவர்களனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றி உரிமையாகும்.

மேலும், சென்ற மாதத்தில் நாம் தெரிவித்திருந்தபடி, வெளியிடங்களிலுள்ள நமது பழைய மாணவர்கள் எல்லோரும் தம் தாய்ப் பாடசாலையின் அன்புக்கோர் அணிகலமாய் விளங்குமாறு அதன் அங்கத்தினரே என்பதற்கு அத்தாட்சியாக பழைய மாணவர் சேர்க்கை பாரத்தில் கையொப்பமிட்டு அதை இங்கு திருப்பியனுப்பக்கடவர். இச்சங்கத்தில் சேருவதற்கு யாதொரு பிரத்தியேகக் கட்டணமும் கிடையாது. ஆனால், நமது பாடசாலையின் பத்திரிகையாகிய போதனாவிஷயப் பூங்கொத்தின் சந்தாதாரராக சேரும் பழைய மாணவருக்கெல்லாம், பூங்கொத்து கிடைப்பதோடு பழைய மாணவர் சங்கத்தின் சகல சுதந்தரங்களுக்கும் உரிமையுண்டு.

அன்னவர் தமது தாய்ப்பாடசாலையின்கண் உள்ள அன்பைக் காட்ட, புதிய சந்தாதார்களைச் சேர்க்கவும் மனமுவந்து முற்படுவார்களென முற்றிலும் நம்புகிறோம். நமது பழைய மாணவர்களிற் பலர் இன்னும் நமது பூங்கோத்தின் சந்தாதார்களாகச் சேராமல் வாளாவிருக்கின்றனர்! ஆகவே அவர்களுக்கு, இத்தாய்ப்பாடசாலையைப்பற்றி நினைப்பூட்டவேண்டியது உங்களது முக்கிய கடமையாகின்றதல்லவா! அத்தகையோரைப் பழைய மாணவர் சங்கத்தில் சேர்ப்பதற்குப் பாரங்கள் எமக்கு எழுதிப் பெற்றுக்கொண்டு வழங்குவீர்களாக! அவர்களைச் சந்தாதார்களாகச் சேர்க்கவும் ப்ரயாசையெடுப்பீர்களாக!!

எமது பழைய மாணவர்களனைவர்க்கும் எமது மனமார்ந்த வாழ்த்துதலைக் கூறுகின்றோம்.

3L
30211/N11PP
1N40.30.10-11

*** *** ***

Admission (சேர்க்கை)

அடுத்த ஜூலை-மீ இப்பாடசாலையில் சேர்ந்து போதனா முறைப்பயிற்சி பெற விரும்புவோர் கவனிக்கவேண்டிய ஒழுங்குகளை, சென்ற மாத பூங்கோத்தில் பிரசுரித்திருந்தோம். அவற்றை மீண்டும் இம்மாதம் பிரசுரிக்கின்றோம். அவை பின்வருமாறு:—

அடுத்த ஜூலை மாதம் இப்பாடசாலையில் சேர்ந்து போதனா முறைப்பயிற்சி பெற விரும்புவோர் இதனடியில் வரும் ஒழுங்குகளைக் கவனிக்கக்கடவார்:—

1. இப்பாடசாலையில் அச்சிட்ட அப்ளிகேஷன் பாரத்தை (Application Form) அதில் போட்டுள்ள விதிகளின்படி பூர்த்திசெய்து அதை மே மாதம் 31-ம் தேதிக்குள் இப்பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு அனுப்பவேண்டும். பாரம் ஒன்றுக்கு 2 அணா வீதம் ஸ்டாம்பு அனுப்பியே தேவையான பாரங்களைப் பெற்றுக்கொள்ளத்தகும். கத்தோலிக்கர்கள் தம் தம் பங்கு சுவாமியார் மூலமாய்த்தான் இங்கு மனு செய்துகொள்ள வேண்டும்.

2. போதனா பயிற்சிக்கு ஸெக்கண்டரி கிரேடில் 40 மாணவர்களையும் எலிமெண்டரி ஹையர் கிரேடில் 80 மாணவர்களையும் சேர்த்துக்கொள்ள, வசதி ஏற்படுத்தியிருக்கிறது.

3. அடுத்த ஜூன் மாதம் **29**-ம் தேதி சனிக்கிழமை காலை **8** மணிக்கு இப்பாடசாலைத் தலைமை ஆசிரியர்முன்

தமிழ்நாடு அரசு ... சென்னை 600 008
182292

ஆஜராகி, ப்ரவேசக் கட்டணம் ரு. **2—0—0** செலுத்திப் ப்ரவேச பரீக்ஷை எழுதித் தேராத எந்த மாணுக்கரும் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

குறிப்பு :—

1. செக்கண்டரிகிரேடுக்கு ஆங்கிலம்; (English Composition) சித்திரம் (Drawing) இந்த இரண்டு பாடங்களிலும், எலிமெண்டரி ஹையர்கிரேடுக்கு தமிழ், கணக்கு இந்த இரண்டு பாடங்களிலும் பரீக்ஷை உண்டு.

2. ப்ரவேசக்கட்டணம் ரூ. 2—0—0-ல் அந்த நாள் (பரீக்ஷை எழுதும் நாள்) சாப்பாடு, இடவசதி, கேள்வி, விடை பத்திரங்களைத் திருத்துதல்—முதலிய செலவுகள் அடங்கும்.

3. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், சேர்க்கைப்பதிவாகும் நாளன்று ரூ. 10 டிபாசிட் (Deposit) கட்டாயம் கட்டவேண்டும்.

4. எலிமெண்டரி ஹையர்கிரேடுக்கு ஸ்டைபண்டு (Stipends) கொடுக்கப்படுமா? கொடுக்கப்படமாட்டாதா? எனச் சிலர் சந்தேகப்படுகிறார்கள். இந்தச் சந்தேகத்திற்கு இடமிருப்பதாகத் தெரியவில்லை. வழக்கம்போல் இனியும் ஷை ஸ்டைபண்டு அளிக்கப்படும்.

Our Employment Bureau
for
Unemployed Trained Teachers

வேலையில்லாத போதனுமுறை பயின்ற ஆசிரியர்களும், இவ்வருஷம் போதனுமுறை பரீட்சை கொடுத்து இன்னும் வேலை கிடைக்காத ஆசிரியர்களும், திருச்சி ரேஞ்சுக்குட்பட்ட கீழ்கண்ட பாடசாலையில்லாத கிராமங்களில், புதிய பாடசாலைகள் ஏற்படுத்தலாமென்றும், அப்படி ஏற்படுத்த முன்னுக்கு வரும் ஆசிரியர்கள், திருச்சினுப்பள்ளி ரேஞ்சு கனம் டிப்டி இன்ஸ்பெக்டருக்கு எழுதி மற்றும் விபரங்கள் பெற்றுக்கொள்ளலாமென்றும், ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

பாடசாலையில்லாத கிராமங்கள்

1.	ஈஸ்வரன் கோயில்	7.	குண்டூர்
2.	கிழிக்கூடு	8.	கட்டகுடி
3.	பனையங்குரிச்சி	9.	புலியூர்
4.	புங்கப்பட்டி	10.	வளவண்டன் கோட்டை
5.	இனும்பாகனூர்	11.	வேலூர்
6.	ஆசூர்	12.	யாகப்புடையான் பட்டி

சென்னை ஆரம்பக் கல்வி இலாகா–
திருத்த விதிகளின் சாராம்சம்

Amendments to the Rules for the Grant of recognition and aid to Elementary Schools.

ஆரம்பப் பாடசாலைகளின் அங்கீகாரம், திரவியசகாயம் சம்பந்தமான திருத்த விதிகள்.

[*Vide* Fort St. George Gazette, Feb. 27, 1940, G. O. No/166 Education.]

1. ஒரு பாடசாலையைவிட்டு மற்றொரு பாடசாலையில் ஒரு மாணாக்கன் சேரும்போது, அவன் ஏற்கனவே படித்திருந்த பள்ளிக்கூடத்திலிருந்து அவனுடைய ரிக்கார்டு ஷீட்டை (Record Sheet) கொண்டுவந்து ஆஜர் படுத்தவேண்டும். ஆனால் ஏற்கனவே வேறொரு பாடசாலையிலும் சேர்ந்து படிக்காமல், நேரே ஓர் பாடசாலையில் முதல் தடவையாகச் சேரும்போது, ஒரு மாணாக்கன் எந்த வகுப்புக்குத் தகுதியோ அந்த வகுப்பில்தான் அப்பாடசாலைத் தலைமையாசிரியர் அவனைச் சேர்த்துக் கொள்ளுவர்.

சாதாரணமாக ஒரு மாணாக்கன் ஒரு பாடசாலையைவிட்டு மற்றோர் பாடசாலையில் சேரும்போது அவனை, அவனுடைய ரிக்கார்டு ஷீட்டில் அல்லது டிரான்ஸ்பர் ஸர்ட்டிபிக்கேட்டில் கண்டபிரகாரம், எந்த வகுப்புக்குத் தகுதியென்று குறித்திருக்குமோ அந்த வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படும். ஆனால், அப்படியில்லாமல், அம்மாணவனை ஒரு வகுப்பு கூட்டி மேல் வகுப்பிலோ, ஒரு வகுப்பு தாழ்த்தி கீழ்வகுப்பிலோ சேர்த்தால், அப்பாடசாலைத் தலைமையாசிரியர், அம்மாணவனை அவ்வாறு சேர்த்ததற்காகக் காரணங்காட்டி அதற்கு அத்தாட்சியாக அவர் நடத்திய பரீட்சை முதலிய ரிக்கார்டுகளை டெப்யூடி இன்ஸ்பெக்டருக்கு உடனே அனுப்பவேண்டும். டெப்யூடி இன்ஸ்பெக்டர் தமது அபிப்பிராயப்படி ஒரு மாணவனை ஒரு வகுப்பிலிருந்து மற்றெந்த வகுப்புக்கும் மாற்ற அதிகாரம் பெற்றிருக்கிறார். ஒவ்வொரு பாடசாலைத் தலைமையாசிரியரும் தமது பாடசாலையில் படிக்கும் ஒவ்வொரு மாணவனையும்பற்றிய ரிக்கார்டு ஷீட் (Record Sheet) வைத்திருக்கவேண்டியது அவசியமாகும்.

2. கீழ் வரும் காரணங்களை முன்னிட்டு ஜில்லா கல்வி அதிகாரியால் அஸெஸ்டு கிராண்டில் 50% வரையில் ஒரு பாட சாலைக்கு கிராண்டு குறைக்கப்படும் :—

(1) பாடசாலையின் இடவசதி, ஒழுங்குகள், போதனை முறை, போதனை சாதனங்கள் முதலியவற்றில் குறைகள் இருத்தல்.

(2) ஐந்து வருடங்கள் வரை தொடர்ந்த படிப்பில்லாமல் இடையே பிள்ளைகள் அடிக்கடி நின்றுபோதல்; ஒரு வருஷத்திற்குமேல் ஒரு வகுப்பில் ஒரு மாணவனை நிறுத்திக் கொள்ளுதல்.

(3) பாடசாலை நாட்கள், பாடசாலை வேலை செய்யும் நேரம், படிப்பு நேரம், முதலியவற்றில் அனுவசியமாய் குறைவுகள் ஏற்பட்டிருத்தல்.

(4) அம்மை குத்தாத பிள்ளைகளைச் சேர்த்து வைத்துக்கொள்ளுதல்.

(5) ராஜீயவாதங்களுக்காகப் பாடசாலையை உபயோகிக்கவிடுதல்.

(6) அங்கீகாரம் பெறாத புத்தகங்களை வைத்திருத்தல்; ஜில்லா கல்வி அதிகாரிகளின் உத்தரவின்றி இரண்டு வருஷங்களுக்குள் அங்கீகாரமான பாடபுத்தகங்களை மாற்றிவிடுதல்.

(7) ரெஜிஸ்டர்களில் ஒழுங்கீனங்கள் காணப்படுதல், ஆசிரியர்களின் சம்பந்தமாய் பிள்ளைகளின் ஆஜர் விஷயமாயும், பெயர் மாறாட்டம் முதலிய ஒழுங்கீனங்கள், இன்னும் சகல விதிகளின்படி ஒழுகாமை முதலியவைகள்.

(8) திரவிய சகாயம் பெறும் பெண் பாடசாலைகளில், (அப்பிரதேசத்தில் பெண்–ஆசிரியர்கள் வேலைக்கு இருக்கின்றனர்–என, கல்வி அதிகாரிகள் தெரிவித்திருக்க, அதைக் கவனியாது) ஆண்–ஆசிரியர்களை நியமித்தல்.

3. கீழ்வரும் காரணங்களைமுன்னிட்டு ஜில்லா கல்வி அதிகாரியால், அஸெஸ்டு கிராண்டில் 50% மேற்படாமல் ஒரு பாடசாலைக்கு கிராண்டு உயர்த்திக் கொடுக்கப்படும் :—

(1) பிள்ளைகளின் அறிவுத் திறமைகளை விருத்திசெய்யக்கூடிய புதிய போதனை முறைகளைக் கையாடி, பிள்ளைகளைப் படிப்பில் தேர்ச்சியுடன் திறமைசாலிகளாகச்செய்வது.

(2) பிள்ளைகளின் உடற்பயிற்சி (Physical Exercises) களில் சிரத்தை எடுத்துக்கொள்ளுதல்.

(3) பொதுவாகப் பிள்ளைகள் தங்களது பிற்கால ஜீவியத்தில் எத்துறையிலும் திறமையான விதத்தில் தம் வாழ்க்கையை நடத்தும்படிக்கான யோக்கியதாம்சையை அளித்துதவுதல்.

4. பின் வருவனவற்றிற்கு எவ்விதத்திலும் கிராண்டு உயர்த்திக்கொடுக்கப்படமாட்டாது.

(1) ஒரே உபாத்தியாயரைக்கொண்டு நடத்தப்படும் பாடசாலைகளுக்கு—உயர்வு கிராண்டு கிடையாது.

(2) I, II வகுப்புகளைமாத்திரமோ, I, II, III வகுப்களை மாத்திரமோ கொண்டுள்ள—டிவிஷனல் இன்ஸ்பெக்டர் (Divisional Inspector) அவர்களால், ஷெ பாடசாலைகள்—உபப் பாடசாலைகள் (Feeder Schools) என்று திட்டமாய் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளைத்தவிர, ஏனைய ஐந்தாவது வகுப்புக்குக் குறைந்த வகுப்புகள் உள்ள பாடசாலைகளுக்கு உயர்வு கிராண்டு இல்லை.

(3) ஒரு பாடசாலையில் வேலை பார்க்கும் மொத்த ஆசிரியர்களில் மூன்றின் ஒரு பங்குக்குமேல் பயிற்சி பெறுத ஆசிரியர்கள் (Untrained-Teachers) வைக்கப்பட்டிருந்தாலும் உயர்வு கிராண்டு வழங்கப்படமாட்டாது.

குறிப்பு :—பெப்ரவரி-மீ 27-ம் தேதி வெளியான கெஜட்டில் ரெஜிஸ்டர் சம்பந்தமான பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

Register of Admission and withdrawals Revised Monthly Return. புது மாதிரியான மாதாந்திர கணக்கு.

இப்பாரங்கள் புதிதாய் வந்திருக்கின்றன என்பதை நேய ஆசிரியர்கள் கவனிப்பார்களாக.

உபாத்தியாயர் : (நகரத்தின் தண்ணீர் குழாயை நினைத்துக் கொண்டு) "அப்படித் திரும்பினுல் குமிறிடுவான், இப்படித் திரும்பினுல் அமர்ந்திடுவான்". யார்?

மணி : நான்தான் சார்...வகுப்பறையில்...நீங்கள், அப்படித் திரும்பினுல் குமுறிடுவேன். இப்படித் திரும்பினுல் கப் சுப் கதவடை......!

காவியத்தில் ஓவியம்

(கொத்து 30, மலர் 9, 201-ம் பக்கத் தொடர்ச்சி.)

M. A. S. Udayar, Tamil Pandit.

ஓர் நாட்டிற்குச் சிறப்பளிப்பன ஆறு, மலை, சோலை, பழனம், உயர்குணமிக்குடைய மக்கள், செல்வமுதலாயின. நம் புலவர் பெருமான் இவற்றுள் சோலை வளத்தினைச் சித்திரிக்குங்கால் அச் சோலையை ஓர் சித்திரச்சாலையாமென்று கூறி அச்சித்திரச்சாலையுள் காணப்படும் சித்திரங்கள் இவையென்று சித்திரிப்பது கற்றோர் மனத்தைக் களிப்புறச் செய்வதாம்.

அவர் தாங்காணலுற்ற சித்திரச் சாலையுள் இவை இவை உள்ளனவென்று கூறு முறையாவது :—ஓர்பால், மா, பலா, வாழை, மாதுளை முதலிய இன்சுவைக்கனி தருமரங்கள் காய்த்துப்பழுத்து கனிந்து விளங்குகின்றன. நீளிடைச்செல்லும் ஆற்றலிலாது சோலைவாய்த் தங்கிய முற்றுமென்சிறையுடைய சிறு புள்ளினங்கள் அழகுற விளங்குகின்றன. அவை அவ்வின் கனிகளையுண்டு மகிழ்கின்றன. இடையிடையே சுகந்த மணமும் சிறந்த நிறமும் பொருந்திய பன்னிற மலர்கள் அலர்ந்து செறிந்து கண் கவர் வனப்பினவாய்க் கலந்து விளங்குகின்றன. அம்மலர் கொய்வான் வேண்டி ஆங்குற்ற இளைஞர் பலர் நிறைந்திருக்கின்றனர். அவர் தம் உள்ளடங்கா உவகைத்திறனை அவர்தம் முகம், அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது எடுத்துக்காட்டி ஒளியுற்று விளங்குகின்றன. மலர்கட்கிடையிடையே மலராப்பெருத குறுமுகைகள் பல விளங்குகின்றன என்று தாங்கண்ட சித்திரச் சாலையின் ஓர் பாகத்தை விளக்குகின்றார். செய்யுள் வருமாறு :—

“ அப்புறத் தமுதுணும் சிறைப்பொற் பார்ந்தபுள்
ளிப்புறந் தலர்கள்கோய் யிளைஞர் வாண்முகம்
முப்புறத் தேழுதிய முகைகள் காட்டிய
துப்புறச் சித்திர கூடஞ் சோலையே,”

இதன் பொழிப்புரை வருமாறு :—அவ்வழகிய சோலையின் ஒரு பாகத்தில் திரண்ட பல சுவையுணவுகளாங் கனிகளை யுண்ணும் அழகிய சிறகுகளையுடைய புள்ளினங்களும், மற்றோர்பால் மலர் கொய்யும் இளைஞர்களின் ஒளி பொருந்திய முகமும், மூன்று பக்கங்களிலும் பலவகை மலரரும்புகளும் நிரம்பி அழகுற எழுதப்

பட்டன போன்றிருத்தலால் அச்சோலை ஓர் சிறந்த சிற்பத் தொழிலும் சித்திரத் தொழிலும் ஒருங்கே கற்றமைந்த பெரியோரால் அமைக்கப்பட்ட சித்திரக் கூடத்தை யொத்து விளங்கியது என்பது.

இக்கவிச் சித்திரத்தில் ஆசிரியர் தாங்கண்ட சோலையையும் சோலையுளமைந்த தனித்தனிப் பொருளையும், சித்திரச்சாலையாகவும், சித்திரமாகவும் வருணித்து, சித்திரம் என்பதன் பொருளாகிய அழகு என்பதனை யியற்கையினமைத்துக்காட்டிய இறைவனது பேரருளையும் விளக்கித் தமது ஆற்றலையும் வெளிப்படுத்திய கவிச்சித்திரம் படிப்போர் மனத்தைப் பரவசப் படுத்துகின்றதன்றோ?

தொடரும்.

சிறந்த சிறு விளையாட்டுகள்! உயர்ந்த விஷயங்கள்!!

ஆங்கிலத்திலும் எளிய தமிழ் நடையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன!!!

ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு இன்றியமையாதது

"PRINCIPLES AND GAMES"

(2 தனி புத்தகங்கள்)

துரைத்தனத்தாரின் சீர்திருத்த முறைப்படி விளையாட்டுகளும், தேகப்பயிற்சிகளும். நவீன அபிநய விளையாட்டுகள்.

போதனுவிஷய பூங்கொத்து சந்தாதார்களுக்குமட்டும் இரு புத்தகங்களும் சேர்ந்து ரூ. 1-4-0-க்குக் கொடுக்கப்படும். தபால்கூலி 3 அணு பிரத்தியேகம். V. P. P-யிலும் அனுப்பலாம்.

மற்றவர்களுக்கு இரு புத்தகங்களும் ரூ. 1-8-0-க்குக் கொடுக்கப்படும்.

ஒரே தடவையில் 6 புத்தகங்களுக்குமேல் வாங்குகிறவர்களுக்கு தபால் கூலி இனும். 12 புத்தகங்கள் வாங்குபவருக்கு 1 புத்தகம் இனும்.

தனிப் பிரதி 0-12-0.

ஏஜண்டுகள் தேவை. கமிஷன் தாராளம். விவரத்திற்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

விலாசம்:— **Mr. V. M. JOSEPH,**
Author and Publisher,
R. C. Secondary Training School,
TRICHINOPOLY.

HOME WORK (வீட்டப்பியாசம்)

M. Gnanasamy, *Sec. Grade.*

வீட்டப்பியாசமானது மாணுக்கன் பாடசாலையில் படித்த் படிப்பைப் பூர்த்தி செய்யும் ஓர் சாதனமாகும். எப்படியெனில் ஆசிரியர் மாணுக்கனுக்கு ஓர் பாடத்தைப் போதிக்கின்ருர். அவனும் அதைக் கவனத்தோடு கேட்டு அறிந்துகொள்ளுகிருன். என்ருலும் அப்பாடத்தில் வீட்டப்பியாசம் கொடுக்கப்படும் பொழுது அவன் தான் படித்ததைத் திரும்பப் புதுப்பித்தும் புத்தகத்திலிருந்து வாசித்தும் எழுதியும் தான் அடைந்த அறிவை பூரணப்படுத்திக்கொள்ளுகிருன்.

இவ்வித வீட்டப்பியாசம் மாணுக்கருக்குக் கொடுப்பதைப் பற்றி பேரறிஞர் பலரும் பல அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கின்றனர். ஒரு சாரார் மாணுக்கருக்கு அது அவசியம் என்கின்றனர். அது அவசியமே இல்லையென்று சாற்றுகின்றனர் மற்ருேர் பாலார். இதற்கு அவர்கள் கூறும்கூற்று என்னவெனில், சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள பள்ளிக்கூட நேரமோ அதிகம். அதனுல் அவர்கள் சரீரத்திலும் புத்தியிலும் களைப்படைகிருர்கள். அதோடு அவர்களுக்கு வீட்டுப்பாடத்தைக்கொடுத்து கஷ்டப்படுத்துவது விசனிக்கத்தக்கதாகும். இவ்வித வீட்டப்பியாசம் அவர்களது சரீரத்திற்கும் புத்திக்கும் தின்மை தருமேயன்றி நன்மை பயக்காது. அதனுல் அவர்கள் படிக்க வேண்டிய பாடத்தைக் கவனமில்லாமல் படிக்கவும் ஏதுவாகும். ஆகவே மாணுக்கர் பள்ளியைவிட்டு வீடு வந்ததும் விளையாடவேண்டும், நன்ருய் இளைப்பாறவேண்டும் என்பதாம்.

அந்த விளையாட்டும் இளைப்பாற்றியும் மாணுக்கருக்கு அவசியம்தாஞ? சந்தேகமற அவ்சியந்தான். ஆனுல் வீட்டுப்பாடம் சிறுவர்களுக்கு அவசியமோ எனக்கேட்டால் முன் சொல்லப்பட்டவை இரண்டும் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அது அவசியமெனவே தெரிகிறது. ஏனெனில் நான் முதலில் சொன்னது போல படித்த அறிவைப் பூரணப் படுத்துவது வீட்டப்பியாசமே. இந்த அப்பியாசம் புத்திக்குக் களைப்பைக் கொடுக்கும் என்பது உண்மை. ஆனுல் அதைப்போல் புத்திக்குத் தெளிவைக் கொடுப்பது வேருென்றுமில்லையென்னலாம். மேலும் வீட்டுப் பாடமில்லாவிட்டால் பையன் வீட்டில் சண்டப்பிரசண்டன்தான். அவனை வீட்டில் காண்பதோ குதிரைக்கொம்பாகிவிடும். இப்

பொழுது ஆசிரியர் மாணுக்கருக்கு எவ்வளவு அளவோடு வீட்டப்பியாசம் கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றிப் பார்ப்போம்.

வீட்டப்பியாசத்தின் அளவைப்பற்றிப் பலரும் பல அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பினும் பொது அபிப்பிராயத்தை நோக்குங்கால், தாழ்ந்த வகுப்பு மாணவர்களுக்கு அரைமணி நேரத்திற் கதிகப்படாத அளவில் அப்பியாசம் கொடுபட வேண்டுமெனத் தெரிகிறது. மத்திய வகுப்பு மாணவர்கட்கு ஒரு மணி நேர அளவும் உயர்ந்த வகுப்பு மாணவர்கட்கு ஒன்றரை அல்லது இரண்டு மணிநேர அளவும் போதுமானதெனக் கருதப்படுகின்றது.

இன்னும் வீட்டப்பியாசம் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் விஷயத்தில் ஆசிரியர் கவனிக்கவேண்டிய வேருேர் முக்கிய விஷயம் அதன் தன்மையாகும். முதன் முதல், கொடுக்கப்படும் வீட்டப்பியாசம் பிறருடைய உதவியில்லாமல் பையன் தானுகவே செய்யக்கூடிய தன்மையுடையதாயிருக்கவேண்டும். ஆகவே உபாத்தியாயர் மாணுக்கனது முன்னறிவிற்கும் புத்தித் திறமைக்கும் தக்கவாறு அப்பியாசம் விதித்தலே தகுதியாகும். மேலும் அவ்வப்பியாசம் குறிப்பாயும் தெளிவாயும் இருக்கவேண்டும்; மாணுக்கனுக்குப் பிரியத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கக்கூடியதாயுமிருக்கவேண்டும். தாழ்ந்த வகுப்புகளுக்குக் கொடுக்கப்படும் அப்பியாசம் பள்ளியில் கொடுக்கப்பட்டதாகவே யிருக்க வேண்டும். உயர்ந்த வகுப்பு மாணவர் தங்கள் அறிவை உபயோகித்து விஷயங்களைக் கிரகித்து எழுதக்கூடிய தன்மையில் அப்பியாசம் கொடுக்கப்பட வேண்டும். அதற்கு மாருக அவர்கள் படித்ததை அல்லது நோட்டில் எழுதினதை அப்படியே திரும்ப எழுதக்கூடிய வகையாயிருக்கக்கூடாது. குறிக்கப்பட்ட காலத்தில் எல்லா மாணுக்கரும் அப்பியாசங்களைக் கொடுக்கும்படி செய்வது ஆசிரியரின் கடமை. ஆகையால் ஆசிரியர் இடம், காலம், சந்தர்ப்பம் முதலியவைகளைக் கவனித்து அதற்கேற்றவாறு அப்பியாசங் கொடுப்பதில் கண்ணுண்டாயிருக்கக் கடவார். வீட்டப்பியாசத்தினுல் மாணுக்கர் பயனடைய வேண்டுமானுல் ஆசிரியர் அதில் போதிய சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும், என்பது சொல்லாமலே விளங்கும். ஏனெனில் மாணுக்கருக்கு இயற்கையிலே வீட்டப்பியாசமென்ருல் வேப்பங்காய்தான். அதை இனிப்பாகச் செய்வது ஆசிரியரைச் சார்ந்ததாகும். என்ருலும் மாணுக்கருடைய பெற்ருேரும் உபாத்தியாயரோடு சேர்ந்து முயற்சிப்பார்களானுல் அவர்களது முயற்சி வீண்போகாதென்பது திண்ணம்.

இப்பொழுது வீட்டப்பியாசத்தால் மாணுக்கருக்கேற்படும் நன்மைகளைச் சற்று ஆராய்வோம். வீட்டப்பியாசம் ஆசிரியர் உதவியில்லாமல் மாணுக்கர் தங்கள் சுய புத்தியை உபயோகிக்க உதவுகிறது. இதனுல் தங்களுக்குத் தாங்களே உதவிசெய்து கொள்ளும் திறமை அவர்களுக்கு ஏற்படுகிறது. மேலும் பிள்ளைகளின் திறமையைச் சோதிக்க ஆசிரியருக்கு அது ஓர் நல்ல வழியாயிருக்கிறது. பெற்றோர் பிள்ளைகளின் விர்த்தியை முன்னிட்டு உபாத்தியாயரோடு சேர்ந்து உழைக்கும்போது வீட்டப்பியாசம் அவர்கள் இருவருக்கும் ஓர் தொந்தார்த்தத்தை உண்டாக்குகிறது. இன்னும் மாணுக்கர் தங்களுடைய ஒழிந்த நேரத்தைத் தகுந்த வழியில் போக்கும் முறையைக் கற்றுக்கொள்கின்றனர்.

இவ்வளவு பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடிய வீட்டப்பியாசத்தைத் தகுந்த முறையில் உபயோகப்படுத்தி அதன் வழியாய் மாணுக்கருக்கு அதன்மேல் விருப்பத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்க ஆசிரியர்கள் முன்வருவார்களென நம்புகிறேன்.

"ஆரம்பக்கல்வி"

சுமார் 5 வருட காலமாக ஆரம்ப ஆசிரியர்களின்
முன்னேற்றத்திற்கு உழைத்துவரும்
ஓர் மாதாந்தரப் பத்திரிகை

இதில் பாடசாலைகள் சம்பந்தமான அரசாங்க உத்தரவுகள், டைரெக்டர் சுற்றறிக்கைகள், கெஜட்டில் பிரசுரமாகும் கல்வி சம்பந்தமான செய்திகள், ஆசிரியர்களுக்கு மிக்க உபயோகமான பொதுச் செய்திகள், கட்டுரைகள் வெளிவரும்.

வருட சந்தா ரூ. 1—0—0. மாதிரிப் பிரதி இனும்.

ஆரம்பக்கல்வி ஆபீஸ்,
94, 95, புதுத்தெருவு, மண்ணடி, மதராஸ்.

பாடக் குறிப்பு

Thomas J. Jesuadian Cardoza.

வகுப்பு : ஆறாவது.

பாடம் : தமிழ்ச் செய்யுள்.

காலம் : 45 நிமிஷம்.

நோக்கம் : "ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும்" என்ற செய்யுளைக் கருத்துவிளங்கப் போதித்தல்.

பீடிகை : ஆசிரியர் அடியிற்கண்ட கதையை ஞாபகப்படுத்துதல். மாணவருக்குத் தெரிந்திராவிடில் சொல்லுதல். "ஒரு வேடுவன்—அலைந்து திரிந்து களைப்புற்றான்—கடைசியில் ஒரு யானையைக்கண்டு,—பாணத்தை எய்தான்—பக்கத்துப் புற்றிலிருந்த பாம்பு வேடுவனைத் தீண்டிற்று. பாம்பை அம்பால் எய்து கொன்றான்—ஆகவே வேடுவன், யானை, பாம்பு யாவும் பிணமாகிக் கிடந்தன—அவ்வழியாய் வந்த நரி, இவைகளைக் கண்டு பல நாட்களுக்கு ஆகாரமாகுமென்று ஆனந்தங்கொண்டது—அன்று விரதத்தினமானதால் நரி அருகிலுள்ள புற்களைத் தின்ன போது வேடுவனுடைய வில்லிலுள்ள அம்பு பட்டு இறந்து போனது."

கதை முடிந்ததும் ஆசிரியர், "நம் இஷ்டப்படியின்றி, எல்லாம் தெய்வச்செயல்போல் நடக்கும்," என்ற கருத்தைப் பிள்ளைகளிடமிருந்து வரவழைத்து நோக்கத்தை வெளியிட்டுப் பாடத்தை ஆரம்பிக்கவும்.

விஷயம்	முறை
செய்யுள் : ஒற்றை நினைக்கின் அது வொழிந்திட்டொன்றாகும், அன்றி அது வரினும் வந் தெய்தும்—ஒன்றை, நினையாத முன் வந்து நிற் பினும் நிற்கும், எனையாளும் ஈசன் செயல்.	விஷயத்தில் காணும் செய்யுளைக் கரும்பலகையில் எழுதி ஆசிரியர் மாதிரியாகப் பாடிக் காட்டல். பின்னர் சிற்சில மாணவர்களையும் பாடும்படி தூண்டுதல்.

விஷயம்	முறை
	பதப்பிரிவு :
	ஒன்றை—நினைக்கின்—அது—ஒழிந்திட்டு—ஒன்று — ஆகும்—அன்றி—அது—வரினும்—வந்து — எய்தும்—ஒன்றை—நினையாதமுன் — வந்து—நிற்பினும்—நிற்கும்—எனை - ஆளும்—ஈசன்—செயல்.
	பதவுரை :
	பதவுரையை வரவழைத்துக் கரும்பலகையில் எழுதி மாணவரை வாசிக்கச் செய்தல். கடின பதங்களை வாக்கியங்களில் உபயோகித்துக்காட்டி, அதன்மூலம் அர்த்தத்தை வருவித்து விளக்கல்.
கடின பதங்கள் :	
அன்றி = அல்லாமல்	நாம் ஆகாயம் அன்றி ஜீவிக்க முடியாது.
எய்தும் = கிடைக்கும்	நன்மை செய்தால் நமக்கு நன்மை எய்தும்.
ஈசன் = கடவுள்	ஈசனைத் தொழுதல் நமது முதற் கடமை.
செயல் = செய்கை	நாம் தீயச் செயல்களைச் செய்யலாகாது.
	இவைபோன்ற வாக்கியங்களைக்கொண்டு விளங்கச்செய்தல்.
	பொழிப்புரை :
	நாம் ஒரு பொருளைப் பெற எண்ணும்போது அப்பொருள் கிடைக்காது வேறொன்று வந்து

விஷயம்	முறை
	கிடைத்தாலும் கிடைக்கும். அதே பொருள் வந்து சேர்ந்தாலும் சேரும். ஒரு பொருளை நினையாத முன்னரே கிடைத்தாலும் கிடைக்கும். இவைகள் யாவும் நம்மைக் காத்து வரும் கடவுளின் செய்கைகளாகும். பொழிப்புரையைப் பிள்ளைகளிடமிருந்தே வருவித்து, 'நாம்' என்ற வார்த்தையை வாக்கியம் பூர்த்தியாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை அறிவித்தல்.
கருத்து : நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும். எல்லாம் கடவுளின் சித்தப்படியே நடக்கும்.	கருத்தைப் பிள்ளைகளிடமிருந்து வருவித்தல். அவர்கள் சொல்லுவதைச் சுருக்கித் தக்க முறையில் அமைக்க உதவிசெய்தல்.
இலக்கணம் : எழுவாய்—பயனிலை—செயப்படு பொருள் ஒன்று ஆகும் ... அது எய்தும் ... அது (தோ.எ.) நிற்கும்	எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் முதலியவற்றை மாணவரிடமிருந்து வருவித்து கரும் பலகையில் எழுதுதல். மாணவரை வாசிக்கும்படி தூண்டுதல்.

பரீக்ஷை

1. செய்யுளைப் பாடுதல் (மாணவர் தனித்தனியாய்).
2. செய்யுளின் கருத்து யாது?
3. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்துக் கூறு.

4. வாக்கியங்களில் அமைத்துக் கூறு :—
அன்றி, எய்தும், ஈசன், செயல்.

க. ப. சு.

செய்யுள் :—ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட்டொன்றாகும்,
அன்றி அது வரினும் வந்தெய்தும்—ஒன்றை,
நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும்,
எனையாளும் ஈசன் செயல்.

கடின பதங்கள் :—அன்றி = அல்லாமல், எய்தும் = கிடைக்கும், ஈசன் = கடவுள், செயல் = செய்கை.

கருத்து :—நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும். எல்லாம் கடவுளின் சித்தப்படியே நடக்கும்.

இலக்கணம் :—

எழுவாய்	பயனிலை	செயப்படுபொருள்
ஒன்று	ஆகும்	...
அது	எய்தும்	...
அது (தோ.எ.)	நிற்கும்.	...

நான் யார் ?

1. உயிரில்லை பாடிடுவேன் ;
உனக்கு மிக உறவாவேன் ;
ஊசி என்மேற் பட்டால்
ஓசை மிக உண்டாமே.
2. கையுண்டு பையுண்டு
கனத்த உடல் தானுண்டு
தையலால் அழகுண்டு
சலவைக்குப் போய் வருவேன்.
3. கையிரண்டு பெற்றிருப்பேன்
கண்ணாடி போட்டிருப்பேன்
மெய்யெல்லாம் எண்கள் ; என்னை
மெல்லவே திருகுவரே.
4. நீரும் நெருப்பும் தின்று, புகை
நிறையக் கக்கி, நிலமீதில்
பாரம் சுமந்து, காற்றைப் போல்
பரு இரும்பின்மேல் நடப்பேன்.

JL
ms211, N11pp
N4030.10-11
182292

"மாடர்ண்" திருவள்ளுவர்

A. Nargunam

அடடா! நம் நண்பர்களில் சிலர் அவ்வளவு அவஸ்தைப் பட்டிருக்கவேண்டியதேயில்லையென்று வாஸ்தவமாகச் சொல்லு கிறேன், சார், இப்பொழுதுதான் தெரிகிறது. ஒருவர் என் னிடம் ஓடிவந்து, "ஒரு ரூபாய்க்கு சில்லரையிருந்தால் கொடுங் கள், சார், ரொம்ப, அர்ஜண்ட்" என்றார். "எதற்கு சில் லரை?" என்று கேட்டதில், "லைப்ரரி" புத்தகம் வாங்க, "ஸ்லிப்கள்" தேவை, அந்த "லைப்ரரி ஸ்லிப்" வாங்க பைசாக் கள் தேவையென்று அறிந்தேன். பரீக்ஷைகள் எழுத நாட்கள் நெருங்க நெருங்க, நண்பர்களிடை, மௌனமும், ஓட்டமும், நடையும் அதிகரித்தன. படித்துப்படித்து நண்பர்களுடைய மண்டைகளெல்லாம் தேய்ந்துவிட்டனவென்றே சொல்லலாம்.

மார்ச்சு மாதம் 18-ம் தேதியும் எதிரில் வந்து நின்றது. "பரீக்ஷை ஹால்" வராந்தாவில் ஏக கூட்டம். அக்கூட்டத் தில் பளிச்சென்று தென்பட்டது ஒரே ஒரு பொருள்தான். அது என்னவென்று கேட்கிறீர்களா? அதுதான் நம் நண்பர், பரிபூரண தீர்க்க சம்பன்ன **ஸ்ரீ குண்டு கணபதிபிள்ளை**யவர் களின் தொப்பை! அவருடைய அருகில்சென்று, "என்ன சார், எல்லாம் 'ரெடி பிரிபேர்ட்,' தானே? என்ன, சார், உங்களை வெகு நாளா காணவே முடியலையே!" என்றேன். அவரை என் அறையைவிட்டு நான் விரட்டிய பழைய ஞாபகத்தில் அவர் என்னுடன் பேசாமல் கொஞ்ச நேரம் மௌனம் சாதித்தார். "என்ன சார், உங்கள் மடியில் இண்ணைக்கு 'அடப்பான்கள்' பலமாயிருக்கு? உங்கள் ரிஜீஸ்டர் நம்பரையும் அட்ரெஸையும் தயவுசெய்து கொடுங்களேன்!," என்று சொல்லிக்கொண்டே விளையாட்டாக அவருடைய மடியைப்பிடித்து இழுத்தேன் தப தப என்று அவருடைய மடியிலிருந்து ஒரு ஐந்து பொடிமட்டை கள் கீழே விழுந்தன. அவைகளை வெகு பொறுமையுடன் எடுத்து வைத்துக்கொண்டார்.

டணார்! டணார்! என்ற மணி சப்தம். எல்லோரும் மட மடவென்று ஹாலினுள் பிரவேசம் செய்கின்றனர். சற்று நேரத்தில் ஹாலில் ஒரே மௌனம் குடிகொண்டுவிட்டது. எல்

லோரும் பரீக்ஷை எழுதுவதிலேயே ஆழ்ந்துவிட்டனர். குண்டு கணபதிபிள்ளையவர்கள் உட்கார்ந்திருந்தது என் சமீபத்தில்தான். கேள்வித்தாள் அவர் கையில் புகுத்தப்பட்டபோது, அடடா! அவர் கை, வாய், தொப்பை முதலிய அங்க உறுப்புகள் என்ன பாடுபட்டதென்று நினைக்கிறீர்கள்? வாய் என்னத்தையோ வெகு மும்முரமாக முணுமுணுத்துக்கொண்டு இருந்தது. கை காற்றால் அடிக்கப்பட்டு ஆடும் மரக்கிளைபோல் நடுநடுங்கி ஆடிற்று. தொப்பை உப்பி, உப்பி, வெடித்துவிடும்போல் இருந்தது. இவ்வளவையும் சமாளித்துக்கொண்டு எப்படியோ ஒன்றன்பின் ஒன்றாக எல்லா பரீக்ஷைகளையும் எழுதித் தள்ளிவிட்டார். நான் என்னமோ அவ்வளவு பயம் பயப்படவில்லை; ஏனென்றால், எனக்கு பரீக்ஷைகள் எழுதியெழுதி பழக்கமாய்விட்டது. நான் பயப்படாமல், எல்லா பரீக்ஷைகளையும் நிதானமாகத்தான் எழுதினேன்.

ஒவ்வொரு பரீட்க்ஷை முடிந்தபிறகும், "என்ன சார்! எப்படியெழுதினீர்கள்?," என்று யாரைக்கேட்டாலும், "என்ன, சுமாராய்த்தான் எழுதியிருக்கிறேன். மோசமில்லை, அனேகமாக பாஸ் பண்ணிவிடுவேன்," என்றுதான் சொல்லுவார்கள். என்னை யார் கேட்டாலும், நானும் அப்படியேதான் சொல்லி வந்தேன். ஏனென்றால், "ஜோராய் யெழுதிவிட்டேன்," என்று சொல்லிவிட்டு, பிறகு "ப்ளக்" அடித்துவிட்டால், மோசமல்லவா? அதற்காகத்தான். வேறொன்றுக்குமில்லை! ஆகையால் பரீக்ஷைகள் எழுதிமுடிந்தபிறகு, எங்கு பார்த்தாலும், "சுமார்" மயம்தான். யாருடைய வாயிலிருந்தும் அந்த "சுமார்" என்ற வார்த்தைதான் அதிகமாக வெளிப்பட்டுக்கொண்டு இருந்தது. குண்டு கணபதி பிள்ளையவர்கள் வாயிலிருந்தும், இதே, "சுமார்," தான் வெளிப்படும் என்று நினைத்துக்கொண்டு, "என்ன, சார், பரீக்ஷையெல்லாம் எப்படி" என்றேன்.

"சும்மா, அதெல்லாம் அனுவஸ்யமா பாஸ் பண்ணிவிடுவேனப்பா! வெளுவெளுண்ணு வெளுத்துட்டேண்ணு? நாம் என்னென்னத்தையோ, இரவா, பகலா குட்டிப்பாடம் போட்டுவச்சதெல்லாம் ஒரு காசுக்கு பிரயோஜனமில்லாம போய்டுத்து போ! கேள்வியெல்லாம் "ஜெனரலா" தானே இருந்தது? நாம்ப,

"படி படிண்ணு படித்ததனாலாயபயன் என்கோல்,
பரிக்ஷை வெளுவெளுண்ணு வெளுக்காவிடின்?"

என்று திருக்குறள் ஒன்று புனைந்து வெளிவிட்டார். அப்படின்னு ரொம்ப, "கங்ராஜுலேஷன்ஸ் சார்," என்றேன் நான்.

அவருக்கு இருந்த ஜோரில் மற்றுமொரு திருக்குறள் புனைந்து பின்வருமாறு வெளியிட்டார்,

"படி படியென்று படிக்க ; படித்தபின்
எழுதுக பரீக்ஷை அதற்குத்தக"

"அடேயப்பா! இவரேது ஒரு பெரிய "**மாடர்ண்**" **திருவள்ளுவர்போலிருக்கே!**" என்று நினைத்துக்கொண்டேன், நான். இந்தஅபார பேர்வழி சொன்னது உண்மைதானு, அல்லது வேறு விதமா யென்பதை, அடுத்த ஜூன் கெஜட்டைப் பார்த்து தெரிந்துகொள்ளுங்கள்.

அபிநயப் பாட்டு

K. S. SANJEEVIMUTHU, *Assistant*, R. C. School, Idaikattur.

ஆபத்தில் உதவாத நேசன்

(இந்த வனத்திற்கிணையேதுமுண்டோ? அல்லது காந்தியோ பரம ஏழைச் சன்யாசி என்ற சந்தம்.)

1. சினேகிதர் இருவர் தேசாந்திரம் போக
வனத்திற்குள் நுழைந்து வழிதனில் ஏக
ஒருவருக் கொருவர் உயிர்த்துணையாக
இருவர்களும் உதவி புரிவோமென்பதாக.
2. பிரயாணம் செய்த சிறிது நேரம் தன்னில்
திறமுயர் கரடி உறுமிவந்ததாம் அன்னில்
அவர்களில் ஒருவன் அணில்போல மரத்தின்
கிளைகளி லேறியே காணுமல் மறைந்தான்.
3. ஓடியே யேறி மறையவே மற்றவன்
கூடிய தரையில் குப்புறப் படுத்தான்
நாடிய கரடி நலமுடன் அடுக்க
வாடியே பிணமென்று தன்மனம் கடுக்க.
4. செத்தபிணமென்று மணம்பார்த்த கரடி
நத்தியவன் காதில் நீதிதனைச் சாடி
உத்தமமாகத் தீண்டாமல் விட்டதும்
பத்திரமாக பண்புடன் எழுந்தான்.
5. சுய நலம் தேடும் கயவர் சினேகம் தனை
நயமென்று நம்பாதீர் நல முயர் நீதிதனை
இதனுல் நமக்குவரும் ஆபத்துக்காலத்தில்
உதவாத நண்பரை நம்பாதீர் நானிலத்தில்.

விடுமுறை நாட்களில் எச்சேவை
நமது லக்ஷியம்

V. M. Maria Arul.

"ஏப்ரல் fஜூல்" அடிக்கவேண்டுமே என்று எனது நண்பன் கூறியவுடனே, விடுமுறை நாள் துவக்கக் காலம் வந்ததே என்ற கவலையேற்பட்டது. உடனே எப்பொழுது புறப்படுகிறது, எந்த வண்டிக்குப்போகிறது, எந்த மார்க்கம், ஏன் மதுரையில் தங்காமல் ஊர் செல்லவேண்டுமென்ற கேள்விகளெல்லாம் பிறந்துவிட்டது. இக்கேள்விகளுக்கு தகுந்த பதில் கொடுக்குமுன்னே இராத்திரி வண்டிதான் ஏற்றது என்றான் மேதாவி ஜான். அடடா, தூக்கம் கெட்டுப்போகுமே என்றார் ஒரு தூங்கு மூஞ்சி. இவ்வளவுதான் எழும்பிவிட்டது ஆத்திரம். "தூங்கவேண்டுமானால் எங்கள் கொட்டத்திற்கு நீர் வீங்க வேண்டியதுதான். வண்டிப் புறப்படவேண்டியதுதான் தாமதம். பாட்டுகளென்ன, சீட்டுகளென்ன, கதைகளென்ன, தமாஷ்களென்ன; பொடிகளென்ன; தம்களென்ன; தூக்கமாவரும்? அடைபட்ட ஜீவியம் உடைப்பட்டதாம் ஓவியம். அவிழ்த்துவிட்ட கன்றுக்குட்டி எடுக்கவேண்டியது ஓட்டம். இவ்வளவு "ஜாலி" யாய் இருக்கும்போது மூதேவி, என்ன நினைக்கிறாய்? என்று மூச்சுவிடாமல் அளந்துவிட்டார் நமது மேதாவி.

இந்த வீச்சு எனக்குப் பிடிக்கவில்லை. ஆனாலும் அவருடைய ஆழம் காண மற்றொரு கேள்வியும் போட்டேன். "சரி, பிரயாணம் ஒரு நிமிஷத்தில் முடியும், லீவு நாட்களிலும் மைனர் மாதிரிதானோ?" என்றேன்.

ஜானுடைய உற்சாகத்திற்கு அளவில்லை. "பாருங்கள் சார். என்னைக் கண்டிப்பார் யாருமில்லை. இந்த கண்டராவி "கிரட்டிஸீஸம்" வகுப்பைப்போல் எம்மைக் கேள்வி கேட்பாருமில்லை? பீடிகை பொருத்தமில்லை. விஷயம் பற்றாது. முறையைக் கையாடவில்லை—உபாத்தியாயர் உற்சாகமாயில்லை. அது குறைச்சல். இது ஓட்டை. இப்படி அப்படிச் செய்யவேண்டும் என்ற கேள்விகள் உண்டா? எப்பொழுதும் மணி மணி, ஜெபம். ஏப்பம்விட நேரமில்லை. ஆனால் வீட்டிலோ எழும்ப காலை எட்டு மணி. உலாத்தல், விளையாட்டு, வயராச் சாப்பிடல். என்னமாவது ஊர்ப்பேச்சு. சீட்டு, பாட்டு, காலைவிரித்து உறங்குதல். ஊர்ப் பிரவேசம். அடுத்தவரிடம் கிண்டல் உருட்டல், பிறட்டல்......என்னதான் வேண்டும்? படுக்கப்போவது

பதினொரு மணிதான்.” என்று தலையை உருட்டி உருட்டி பேசினார். இந்தப் பேர்வழிக்கு சூடுகொடுக்கத் தக்க சமயம் என்று எண்ணிக்கொண்டேன். முன்கோபி என்று எனக்குத் தெரியும். ஆகையால் மெதுவாகச் செப்பியதாவது: “உமது வாய் பெரிதாய்விட்டது. உம்மை ஞானம் நிறைந்த உபாத்தியா ராக்க பழக்குகிறார்களா? அல்லது சோற்றுக்குக் கேடான காலிப் பயலாய் வளர்க்கிறார்களா என்பது விளங்கவில்லை.” இவ்வளவு தான் முகத்தில் கோபக்குறிகள். உபாத்தியாயர் அல்லவா? கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களல்லவா? ஆகையால் நான் சொல்லிய வார்த்தைகள் அவரை தட்டி எழுப்பிவிட்டன. எழுந்தார் ஐயாவிடம் போவதற்கு.

நான் புன்முறுவலுடனே நான் சொல்லியது தப்பிதம். ஆனால் லீவு துவக்குமுன் நம்மை விசாரிப்பவர்கள் என்ன புத்திமதி கூறினார்கள். சொல்லும் ஒரு காதில் கேட்டு மறு காதில் விட்டுவிட்டீரோ!.........ஓகோ—நீர் செய்தது தப்பித மென்று ரூபிக்கிறேன் என்றவுடனே, தனது கோபத்தை ஒருவாறு தணித்துக்கொண்டு பின்வருமாறு மனப்பாடத்தைக் கக்கினார்—ஜான். “ம்-உம்...இல்லை...மறுதலி...பிரம்மாச்சாரி யம் சதமர்க்கடம் சொல்லாமல் செய்வர் பெரியோர். சொல்லிச் செய்வர் சிறியோர் சொல்லியும் செய்யார் கசடர்—”...தூக்கிப் போட்டதுபோல், பொட்டுப்போல, காரசாரமுள்ள நடத்தை எங்கே?

“சேவையே நமது லக்ஷியம்... பொது ஜீவியம் பெருந் தபசு... மௌனம் தெய்வீகம்!...ஒழுக்கமே அறிவு உழைப்பே திறமை நல்லமாட்டிற்கு ஒரு சூடு, சண்டிமாட்டிற்கு பல சூடு. குணவான் குற்றத்தை உணர்வான்...” என்று சொல்லிக் கொண்டே திடீரென்று நிறுத்தி என்னை விழித்துப்பார்த்தார். ஒரு சிமிட்டுச்சிமிட்டினேன். உடனே இரண்டுபேருங் கைகுலுக் கிக்கொண்டதற்குக் காரணத்தை அறிய ஞானிகளாகிய வாசகர் களையே கேட்டுக்கொள்ளுகிறேன்.

“எக்ஸ்கியூஸ் மி” விடுமுறைநாளில் எந்தச் சேவை நமது லக்ஷியம் என்று பக்திமான்போல் கேட்கத்துவக்கினார். இது தான் தருணமென்பதை உணர்ந்து பின்வருமாறு விடுமுறை நாட்களை எவ்வாறு கழிக்கவேண்டுமென்று ஒரு சிறு பிரசங்கம் செய்தேன்.

“பெரியோர்களின் கண்காணிப்பில் சிலகாலம், பற்பல ஒழுங்குகளுக்குக் கீழ்ப்பட்டு, நாளுக்கு முப்பத்தைந்து முறைக் குக் குறையாமல் பெரிதோ சிறிதாகவோ ஜெபம்செய்து நமது

மனதை வேறுவழியில் அதிகம் செலுத்தவிடாமல் படிப்பிலும் தெய்வபயத்திலும் போதனுமுறைப் பாடசாலை உள்பிள்ளைகள் இடத்தில் நடத்தப்பட்டுவருகிறோம். ஆனால் விடுமுறை நாளைக் கழிக்க வீடுசெல்லும்பொழுது அடைபட்ட ஜீவியம் உடைபட்டதுமாதிரிதான். **ஆனாலும்** இப்பொழுதுதான் நம்மை விசாரிப்பவர்களின் வார்த்தைகள் நமக்கு ஒலிக்கவேண்டும் "ம்...உம்... இல்லை...சொல்லாமல் செய்வர்......etc." மனிதன் பலவீனன். வாலிபன் குறும்புக்கார நூறுகுரங்குகளுக்குச் சமம். "பிரம்மாச்சாரியம் சதமர்க்கடம்." தன்னையே அறிவுகொண்டு அடக்காவிட்டால், அடங்காப்பிடாரிபோல் ஆகவேண்டியதுதான். ஊரில் பெரியோரும், வாலிபரும், சிறியோரும் நம்மிடம் நற்குணத்தை விரும்பி எதிர்பார்ப்பர். அவர்களைத் திருப்திசெய்ய நன்மாதிரிகையே நமது லக்ஷணம். ஞானம்நிறைந்த உபாத்தியாயராய் விளங்கவேண்டியது உமது கருத்து என்பது வெள்ளிடை மலை. ஆகையால் நமக்குப் பிற்காலப் பிரயோஜனமாகும்படி கலைகளை வாசிக்கலாம். நேரத்தைக் கழிக்கப் பின்வரும் என் யோசனையைக் கையாடலாம். நமது பாடசாலையிலிருந்து பழைய மாணவரிடமும், மற்றும் பெரியாரிடமும் சென்று நமது பாடசாலை நிகழ்ச்சிகளையும், நவீனப் போதனுமுறை, கல்வி இலாக்காவில் சீர்திருத்தம், அபிநயப்பாட்டுகள், கட்டுறைகள், யோசனைக் கணக்குகள் முதலியவற்றை எடுத்தோதும் நமது பூங்கொத்திற்கு புதிய சந்தாதார்களைச் சேர்க்கப் பெரியோர்களிடமும் சினேகித உபாத்திமார்களிடமும் சம்பாஷணை வைத்துக்கொள்ளலாம். இது ஒரு கஷ்டமான வேலைதான். ஆனால் இரட்டிப்புக்கூலி. பழையமாணவர்களின் அந்நியோந்நிய ஐக்கியத்தை உண்டாக்கும் "பழைய மாணவர் சங்கத்திற்கு" ஆட்களைச் சேர்க்க முயற்சி எடுக்கலாம். நமது பூங்கொத்தை இன்னும் எந்தவிதத்தில் அபிவிருத்தி செய்யலாம் என்ற தியானம் பண்ணலாம். "ஒழுக்கமே அறிவு உழைப்பே திறமை" என்னும் விருதுக்கொடியை இங்கு பெற்று, தங்கள் நடத்தையில் தவறியிருப்பவரை கர்நாடக தூக்கத்தினின்றும் எழுந்திருக்க நவீன போதனுமுறை, தற்கால நாகரீகம், கல்விச் சீர்திருத்தம் முதலியவைகளைப்பற்றி மற்றவர்களுக்குச் சொல்வதும் உசிதம். நோட்டம் சொல்லுவதைப் பார்க்கிலும் யோசனை சொல்லுவதுமேல். அதற்குமேல் ஒன்று, உதவிசெய்வதாம். சித்திரப் பட்டாடையைச் சிப்பமாகக் கட்டிவைத்தால் அதன் சிறப்பு விளங்காததுபோல், நீர் படித்திருக்கும் புதியமுறைகளை பிறருக்கு அறிவிக்கவேண்டும்."

பாடசாலை நிகழ்ச்சிகள்

I பாப்பரசர் கோடி உயர்த்துத் திருநாள் (**3—3—40**)

இன்று நம் பரிசுத்த பிதாவாம் XII-ம் பத்திநாதரின் வருஷாந்தர விழாக்கொண்டாட்டம். பாப்பரசர் கோடி உயர்த்தப்பட்டது. ஆசிரியமாணவர்கட்குள் உதை பந்து (Foot-ball) போட்டி விளையாட்டு நடைபெற்றது. பின்னர் மாலையில் பஜனைக்கோஷ்டி ஆரம்பித்தது. பாப்பரசரின் ஜீவிய சரிதையுடனும், அப்பிதாவுக்குப் பல்லாண்டு வாழ்த்துடனும் கோஷ்டி முடிவுற்றது.

II பிரிவி உபசாரக்கோண்டாட்டம் (**4—3—40**)

இன்று மாலை 4-மணிக்கு, இப்பாடசாலையில் போதனு முறைப் பயிற்சியை முடித்து வெளியே செல்லும் ஸீனியர் கிரேடு (Seniors) மாணவர்களின் பொருட்டு பிரிவு உபசாரம் (Fare-well) வெகு விமரிசையுடன் நடத்தப்பட்டது. முன் வருஷங்களில் தனித்தனியாய், பகுதிபகுதியாய், நடந்ததைப் போலல்லாமல், இவ்வருஷத்தில், தலைமை ஆசிரியரும், மற்ற ஆசிரியர்களும், ஸீனியர் ஜுனியர் மாணவர்களும் (உள் வெளி மாணவர்கள்) விசேஷவிதமாகத் தலைமை ஆசிரியரின் ஆதரவினிடை ஒன்றுகூடி, திருக்குடும்பப் பாடசாலை என்ற இப் பாடசாலையின் திருநாமத்திற்கொப்ப, ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டியதும் அன்னியோன்னியபான்மையுடன் அளவளாவியதுமே இவ்வருஷ ஷெ கொண்டாட்டத்தின் சிறப்பாகும்.

இக்கொண்டாட்டம் மேற்குறித்த நேரத்தில் சபாமண்டபத்தில் (Assembly Hall) நன்கு வரிசை செய்த ஆசனங்களுக்கெதிரில் அமர்ந்த மேஜைகளின்மேல் விதவிதமான சிற்றுண்டிகள் அனைவரையும் வரவேற்க, ஆங்கு, ஆசிரியர்களும், மாணவர்களும் மனமுவப்பச் சிற்றுண்டி (Tea Party) அருந்திய பின்னர், சீனிய மாணக்கர்களிலிருவர் சீனியர்களின் சார்பாக, தாங்கள் இப்பாடசாலையினின்று அடைந்த சகல ஆக்கத்திற்காகவும், சன்மானங்களுக்காகவும் தங்களது நன்றியறிதலைக் கூறி, தாய்ப்பாடசாலையின்பேரில் தாங்கள் அன்பு பாலிப்பது போல் ஜூனிய மாணவர்களும் அவ்வழிபற்றி ஒழுகும்படி அறிவுறுத்தினர்.

அப்பால் ஜூனியர்களின் சார்பாகவும் இரண்டொருவர் பேசி முடித்தனர். ஆசிரியர்களிற் சிலர் அன்னவர்களுக்குப் புத்திமதிகள் கூறினர். கடைசியாகத் தலைமை ஆசிரியரவர்கள் பலத்த கரகோஷங்களுக்கிடை எழுந்து அப்பிரிவு உபசாரத்தின் முக்கிய கருத்தாகிய, தாய்ப்பாடசாலைக்கும், அதன் மக்களாகிய மாணவர்களுக்கும் இருக்கவேண்டிய, அன்பு, ஆதரவு, பாச நேச ப்ரயோஜனங்களையெல்லாம் எடுத்துக்கூறி உற்சாகப்படுத்தவே, அனைவரும் மனம் மகிழ கூட்டம் இனிது முடிந்தது.

III ஆசிரியர் சங்கத்தின் ஆண்டு நிறை விழா (**11—3—40**)

இவ்விழா சங். கஸ்பார் பிண்டோ சுவாமிகள் அவர்களது தலைமையின்கீழ் கூடியது. திருச்சி அர்ச். சூசையப்பர் கலாசாலை பேராசிரியர் ஸ்ரீ இருதயசாமி ரெட்டியார் M.A., B.L. அவர்கள் உபந்நியாசகராக அமர்ந்திருந்தனர். அன்று மாலை 5 மணிக்கு சிற்றுண்டி (Tea party) வழங்கியபின்னர் ஷெ சங்க நிகழ்ச்சிகள் சபாமண்டபத்தில் நடந்தேறின. உபந்நியாசகர் ஆசிரியர்களது கடமைகளைப்பற்றி அழகியதோர் உபந்நியாசம் புரிய, அக்கிராசனம் வகித்த சுவாமியாரவர்கள் ஆசிரியர்களது தொழிலின் உயர்வையும், பொறுப்பையும்பற்றி வெகு விஸ்தாரமாய்ப் பேசிமுடிக்கவே, அவர்களுக்கு வந்தனோபசாரங்கள் கூறி, பாடசாலை வாழ்த்துப்பாவுடன் கொண்டாட்டம் இனிது முடிந்தது.

IV உல்லாசப் பிரயாணம்

11-3-40 திங்கட்கிழமை காலை 7½ மணிக்கு 5வது வகுப்பு மாணவர்கள் 30 பேர் அவர்களது உபாத்தியாயரின் பின் மலைக்கோட்டை சென்று, அங்கு சரித்திர சம்பந்தமான விஷயங்களையும், கண்காட்சிகளையும் கண்டனர். அர்ச். சூசையப்பர் கலாசாலை பொருட்காட்சிகளையும் பார்வையிட்டு ஆனந்தமும் பயனும் அடைந்தனர். 10 மணிக்கு தமிழர் விடுதியில் சிற்றுண்டி அருந்தினர். பின்பு கோட்டை புகைவண்டி நிலயத்தில் ரயில் ஏறி பாலக்கரையில் இறங்கி அவரவர் இல்லம் ஏகினர். எல்லோரும் பிரயாணத்தில் அளவில்லா குதுகலத்துடன் இருந்தனர்.

V T. S. L. C. பரீட்சை (18-3-40 to 20-3-40)

இப்பரீட்சை நமது போதனுமுறைப் பாடசாலை ஸெண்டரில் வழக்கம்போல் 18-3-40 முதல் 20-3-40 முடிய 3 தினங்கள் நடைபெற்றது.

நமது பாடசாலை மாணவர்கள் (பரீட்சை எழுதவேண்டிய பழைய மாணவர்கள் உள்பட) ஸெக்கண்டரி, ஹையர் கிரேடு மாணவர்களும், அரசாங்க போதனுமுறைப் பாடசாலை மாணவர்களுமாகிய சுமார் 14 ஏனைய பள்ளிக்கூடமாணவர்களும் ஆக 300 பேர்கள் இங்கு ஷை பரீட்சை எழுதினர்கள். நம் பாடசாலையின் தலைமை ஆசிரியரே "சீப் சூபெரின்டென்டெண்ட் (Chief-Superintendent) ஆக அரசாங்கத்தாரால் நியமிக்கப் பெற்றிருந்தனர்.

பரீட்சை எழுதின சகல மாணவர்களுக்கும் போதிய இருக்கை, ஜல சப்ளை முதலிய வசதிகள், அமைத்துக் கொடுத்ததைப்பற்றி, பரீட்சை மேன் பார்வை பார்த்த உத்தியோகஸ்தர்கள் வெகுவாய்ப் பாராட்டினர்கள்.

பெற்றோர் சங்க திறப்புவிழா

(பழய மாணவன் M. சவரிமுத்து பிள்ளை)

7—3—1940.

திருச்சினுப்பள்ளி ஜில்லாபோர்டு ஆதீனத்திற்குட்பட்ட தோகமலை போர்டு பெண் பாடசாலையில் 7-3-1940 பகல் 4 மணிக்கு பெற்றோர் திரளாகக் கூட, சிறுமிகள் குதூகலமாக வரவேற்க, குளித்தலை தாலுகா அதிபர் தாசில்தார் ஸ்ரீமான் P. A. அந்தோணி M. A. அவர்கள் அக்கிராசனராக அமர, சிறுமிகள் வரவேற்பு கீதம், உபசார பத்திரம், கும்மி கோலாட்டங்களால் மகிழ்வித்து ரோஜாமலர் சூடினர். "கல்வியின் சிறப்பு" விஷயமாக சிறுமிகள் வெகு சாதுரியமாக சம்பாஷித்தனர். உள்ளூர் போர்டு ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் முதல் உதவி ஆசிரியர் ஸ்ரீமான் K. குழந்தைவேல் நாட்டார் (பழைய மாணவர்) "ஆரம்பக் கல்வியும் பெற்றோரும்" என்ற விஷயமாக அரிய பிரசங்கம் செய்தார். அக்கிராசனர் தமது முடிவுரையாக பெற்றோர் சங்க விஷயமாகப் பேசி ஷை சங்க கமிட்டி ஏற்படுத்தி உள்ளூர் டாக்டர் P. K. Atchan L.M.P. (அச்சன்) பிரசிடெண்டாகவும் மற்றும் பெற்றோரில் 9 மெம்பர்களும் ஒரு செகரட்டேரியும் நியமனம் செய்தார்கள். கூட்டம் இரவு 7-30 க்கு ராஜ வாழ்த்துடன் முடிந்தது. இவ்வூர் பெண் பாடசாலை தலைமை உபாத்தினி ஸ்ரீமதி மலையம்மாள் முயற்சியை எல்லா கிராம ஆசிரியர்களும் பின்பற்றக்கடவார்களாக.

விண்கற்கள் (Shooting Stars)

Br. Sandanamarian

அறிவு செழித்தோங்கும் இருபதாம் நூற்றாண்டாகிய இக் காலத்திலும் முதலாம் படிப்பாளராய்க் கருதப்படும் சிலரிடம் சில சாஸ்திரங்கள் சம்பந்தப்பட்டமட்டில் தப்பறையான ஒன்றிரண்டு எண்ணங்கள் ஊடாடுவது விசனிக்கத்தக்கதே. இவ்வித தப்பபிப் பிராயங்கள் இருந்துவரும் சாஸ்திரங்களில் முதலிடம் வகுப்பது வானசாஸ்திரமென்றால் மிகையாகாது. இப்பொழுது விண்கற் கள் (Shooting Stars) விஷயமாய் ஏற்பட்டுள்ள தப்பபிப்பிரா யத்தை நீக்குவோம்.

விண்மீன் நிறைந்ததும் திங்களற்றதுமான இரவில் வான மண்டலத்தை உற்று நோக்கின் ஏதோ ஒன்று எரிந்துசென்று மறைவதைச் சிலசமயங்களில் காணலாம். இவைகள் எரிந்து விழும் நட்சத்திரங்கள் என்று சிலரும், இடம்பெயரும் நட்சத் திரங்கள் என்று வேறு சிலரும் அறியாமையால் இயம்புகின்றனர். இவைகள் நட்சத்திரங்கள்போல் தோன்றிடினும் உண்மையில் இவைகள் வெறும் கற்களே. இவற்றின் வியாக்கியானம் பின்வரு மாறு.

ஆகாசத்தில் சூரிய சந்திர நட்சத்திரங்கள், கிரகமுதலியவை சதா சுழன்றுவருவதுபோல் வான சாஸ்திரிகளால் மீற்றியோர்ஸ் (Meteors) என்றழைக்கப்படும் விண்கற்கள் கோடிக்கணக்காய் பூமி சூரியனைச் சுற்றிவரும் பாதைக்குப் பக்கத்தில் சுற்றிக்கொண் டிருக்கின்றன.

கணித சாஸ்திரிகளில் உயர்ந்தோங்கிய **நீயுட்டன்** எண்பித்த படி பூமியானது தன் பக்கத்திலுள்ள பொருட்களை ஆகர்ஷண சக்தியால் தன்னிடமிழுப்பதை எவரும் மறுக்கார். அப்படியா யின் நாம் வசிக்கும் இம்மாபெரும் பூமி தனது பாதைக்குப் பக் கத்திலுள்ள விண்கற்களை தன்னிடம் இழுக்குமென்று சொல்லத் தேவையில்லை.

இப்பொழுது, இவ்விதம் இழுக்கப்படும் இக்கற்கள் தன் னிலே பிரகாசமற்றிருந்தும் எரிந்துவிழுவதின் காரணத்தைப் பார்ப்போம்.

ஏதாவது இரு பொருள்கள் ஒன்றோடொன்று போதிய வேகத்துடன் உரசினால் உஷ்ணமும் சிலசமயம் நெருப்பும் உண்டாகும் என்பதை நாமறிவோம். இதில் விசேஷமாய் கவனிக்க வேண்டியதென்னவென்றால் பொருளின் கடினம் குறையக் குறைய உரசுதலின் வேகம் அதிகப்படவேண்டும். காற்றும் ஒரு பொருளானபடியால் ஏதாவதொரு பொருள் அஃதுடன் உரசினால் தீயுண்டாகும் என்பது திண்ணம்.

வான சாஸ்திரிகளின் ஆராய்ச்சிப்படி நமது பூமியைச் சுற்றியுள்ள ஆகாயமண்டலம் (Atmosphere) சுமார் 200 மைல் வரை வியாபித்திருக்கிறதாக அறிகிறோம். இவ்வாகாயமண்டலத்திற்கு வெளியே உள்ள விண்கற்களைப் பூமி இழுக்கும்பொழுது அவை சொல்ல முடியா வேகத்துடன் ஆகாய மண்டலத்தை நோக்கி வருகின்றன. இவைகளுக்குச் சுயபிரகாசமில்லாதபடியால் ஆகாயமண்டலத்தை அடையும்வரை நமது கண்களுக்குப் புலப்படுவதில்லை. ஆனால் ஆகாயத்தை வெகு வேகத்துடன் ஊடுருவிச் செல்லுங்கால் உரசுதலின் காரணத்தால் இக்கற்கள் சூடடைந்து, பின் ஜொலித்துக் கடைசியாய்ப் பெரும் ஆவியாய்ப் போய்விடுகின்றன. இச்சமயத்தில் உண்டாகும் பிரகாசத்தால் தான் இக்கற்கள் நமக்குத் தென்படுகின்றன. ஒரு க்ஷணத்தில் கற்களை ஆவியாக மாற்றும் சக்தியுடைய உஷ்ணத்தை உண்டு பண்ணக்கூடிய வேகம் எத்தன்மையானதென்பதை எவர்தான் கண்டுணர்வார்!

இப்படி எரிந்துவிழும் கற்களின் எஞ்சிய பாகம் பூமியில் விழுவதுண்டு. இப்படி விழுந்தவற்றிற்கு மீற்றியரைட்ஸ் (Meteorites) என்று பெயர். இவற்றில் சிலவற்றை லண்டன், பாரிஸ் முதலிய நகரங்களின் பொருட்காட்சிசாலைகளில் இன்றும் பார்க்கலாம்.

இக்கற்களை நாம் அதிகமாய்ப் பார்ப்பது அக்டோபர், நவம்பர் மாதங்களில். ஏனென்றால் இக்காலங்களில் நமது பூமி அதிக விண்கற்கள் சுழன்றுகொண்டிருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் செல்லுகின்றது. நமது கண்களுக்குத் தென்படும் விண்கற்கள் சொற்பமாயினும் பூமி தினம் இழுக்கும் விண்கற்கள் லட்சக் கணக்கானவை என்பது வானசாஸ்திரிகளின் துணிபு.

பாப்பரசர் மகுடாபிஷேக கொண்டாட்டம்

M. R. Gnanapragasam,

H. M., Orikottai.

ஓரிக்கோட்டை R. C. பாடசாலை மாணவர்கள் 3-3-40 பரிசுத்த பாப்பரசரின் துவஜத்தை தங்கள் பள்ளியின்மீது பறக்க வைத்தனர்.

10-3-40 வரை பிரதிதினம் பரிசுத்த தந்தை 12-ம் பத்திநாதர் படம்தாங்கி ஊர்வலம் வந்தனர்.

10-3-40 மாலை சுமார் 5 மணிக்கு சுமார் 600 ஜனங்களிடையே M. R. ஞானப்பிரகாசம்பிள்ளை அவர்கள் தலைமையில் ஷெ விழா ஆரம்பித்தது.

கடவுள் வாழ்த்துதலுக்குப்பின் பரிசுத்த தந்தையின்படம் திறந்துவைக்கப்பட்டது. சின்னய்யா, ராயர், அந்தோனி முதலியவர்கள் முறையே அர்ச். பாப்பானவரின் தவருவரம், கல்வியின்மட்டில் பெற்ருேர் சிரத்தை, பெண்கல்வி, முதலிய விஷயங்களை இனிது எடுத்துரைத்தனர்.

இடையிடையே சிறுவர்களால் விகட சம்பாஷணைகள் சிறு சிறு டயலாக்குகள், (நான்கு செவிடர்கள், கோழி டயலாக்) நடைபெற்றன.

பந்தய விளையாட்டுகளுக்குப் பின் பாப்பரசர்மட்டில் நமக்குள்ள கடமை, கத்தோலிக்கு பிரசுரங்கள், போதனை விஷயப் பூங்கொத்து போன்ற சிறந்த பத்திரிகைகள் வரவழைத்தல், முதலியவற்றை எடுத்துரைத்து, வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கியபின் பாப்பரசர் வாழ்த்துப் பாடலுடன் வைபவம் இரவு 7-30 மணிக்கு முடிவுபெற்றது.

சுப்பன்: அடே குப்பா என்னேடு சம்பிரதாயம் போட்டது போல பரீக்ஷைக்குப்பரீக்ஷை பூஜ்ஜியம் வாங்கிவிடுகிருயே?

குப்பன்: ஆமாமாம், அதுகூட வாங்கமுடியாமல் தோற்றுப் போனவனுக்கு ஒரு பேச்சுகூடவா!

திருச்சி திருக்குடும்ப போதனுமுறை பாடசாலை
பழைய மாணவர் சங்கம்
R. Pitchai Pillai, காரியதரிசி.

வழக்கப்படி எம் பாடசாலையின் பிரிவு உபசார வைபவம் 4-3-1940 திங்கட்கிழமையன்று நடைபெற்றது. அவ்வைபவத்திற்கு திருச்சி அர்ச். சூசையப்பர் கலாசாலை பேராசிரியர் ஸ்ரீ தாமஸ் சீனிவாசனவர்கள் தலைமை வகித்தனர். அவ்வமயம் எம் பாடசாலை தலைமையாசிரியர் சங். A. லூர்துசுவாமி B.A., L.T., அவர்கள் இப்பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் சார்பாக பேசினபோது, சங்கத்தின் நோக்கங்கள் நமது பாடசாலையின் பழைய மாணவருக்குள் சகோதரத்துவம் ஏற்படுத்துவதும், தாய்ப்பாடசாலை மட்டில் அவர்களுக்குரிய அபிமானத்தை வளர்ப்பதும், போதனுமுறைகளின் நவீனங்களை அவர்களுக்கு அறிவுறுத்துவதுமேயாகும் என்றும், இம்மேலான நோக்கங்களுடைய ஒரு பழைய மாணவர் சங்கம் நம் பாடசாலையில் ஸ்தாபிக்கப்பட வேண்டிய அவசியத்தைப்பற்றியும், வெகு அழுத்தமாகவும், பொருத்தமாகவும், திருத்தமாகவும் எடுத்துக்கூறினுர்கள். தலைமையாசிரிய சுவாமியவர்கள் கூறியதற்கொப்ப குழுமியிருந்தவர்களில் பலர் இம்மாதிரியான சங்கம் ஒன்று தேவை என்பதைப் பற்றி வற்புறுத்திச் சொன்னுர்கள். இறுதியில் அக்கிராசனுதிபதி ஸ்ரீ தாமஸ் சீனிவாசனவர்களது இனியதொரு உபன்னியாசத்தோடு அன்றைய வைபவம் முடிவு பெற்றது.

10-3-40-ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு எம் பள்ளிக்கூடத்தில் பழைய மாணவர் சங்கத்தின் சார்பாக ஒரு பொதுக்கூட்டம் நடந்தேறியது. அக்கூட்டத்திற்கு சங். A. லூர்துசுவாமி B.A., L.T., அவர்கள் தலைமை வகித்தனர். கூட்டத்திற்கு இவ்வருஷத்திய பழைய மாணவர் மட்டுமேயன்றி, ஏற்கனவே பயின்று இப்பாடசாலையைவிட்டு வெளியேறின பழைய மாணவர்களில் பலருமாக சுமார் 150 பேர் ஏகியிருந்தனர். எம்பாடசாலை பழைய மாணவர் சங்கம், எம்கழகத் தலைமையாசிரியர் சங். A. லூர்துசுவாமி B. A., L. T., அவர்களால் நிறுவிக்கப்பட்டது. பின்னர் கீழ்கண்டபடி சங்கத்தின் உத்தியோகஸ்தர்களும், காரியக்கமிட்டி அங்கத்தினரும் நியமிக்கப்பட்டனர்.

உத்தியோகஸ்தர்கள்

தலைவர்

சங். A. லூர்துசுவாமி B.A., L.T., Headmaster.

உபதலைவர்கள்.

ஸ்ரீ. A. R. ஜோசப் B.A., L.T., Assistant, R. C. Training School.

,, T. S. கணபதி அய்யர், ,, ,, ,,

கூட்டுக்காரியதரிசிகள்.

,, R. பிச்சைப்பிள்ளை, Teacher, R. C. Training School.

,, D. S. சுப்ரமணியம், Teacher, Amba Samudram.

போக்கிஷதார்.

,, Y. சூசைமாணிக்கம், Teacher, Holy Redeemer's, Trichy.

காரியக்கமிட்டி அங்கத்தினர்

1. சங். பிரதர் போனிபஸ், Sacred Heart H. E. School, Golden Rock, Trichy.
2. ஸ்ரீ. M. சம்மனசு, R. C. Training School, Trichy.
3. ,, கிருஷ்ண ரெத்தினம், ,, ,, ,, ,,
4. ,, பாலசுப்பிரமணியம், E. R. High School, Trichy.
5. ,, லூர்துராஜ், St. Joseph's College, High School, Trichy.
6. ,, மரியானந்தம் பிள்ளை, Selvavinayagar Ele. School, Bhimanagar, Trichy.
7. ,, நற்குணம், (S. Arcot.)
8. ,, விஸ்வநாதன், (Puducottah.)
9. ,, மரியஜெகம், (Ramnad.)
10. ,, S. மரியரெத்தினம், Do.
11. ,, S. V. ராயப்பன், (Tinnevelly.)
12. ,, A. J. ஜோசப், (Coimbatore.)

அடுத்தபடியாக கீழ்கண்ட தீர்மானங்கள் கூட்டத்தாரால் ஏகமனதுடன் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் இனிதுமுடிந்தது.

(1) இச்சங்கமானது "திருச்சி திருக்குடும்பப் போதனுமுறை பாடசாலை பழையமாணவர் சங்கம்," என அழைக்கப்படவேண்டும்.

(2) சங்கத்தின் ஒழுங்குகளை நிர்ணயிக்கும் அதிகாரம், சங்கத்தின் உத்தியோகஸ்தர்களுக்கும் காரியக் கமிட்டியாருக்கும் அளிக்கப்படவேண்டும்.

(3) இச்சங்கம் யாதாமொரு செயலை செய்யுமுன் அதற்கேற்ற ஓர் திரவிய நிதி ஏற்படவேண்டும்.

(4) காரியக் கமிட்டிக் கூட்டம் ஒன்று 14-3-1940 வியாழக்கிழமை கூடவேண்டும். 3-வது தீர்மானத்துக்கிணங்க தாராளமுடைய தலைவரும், நண்பர்கள் பலரும் தமது நன்கொடைகளைச் செய்யவே, தற்சமயம் நமது பழைய மாணவர் சங்கத்தின் நிதியில் சுமார் ரூ. 120 உண்டு என்பதை நண்பர்கள் பலருக்கும் தெரிவித்துக் கொள்வதோடு, தங்களது நன்கொடைகளைத் தாங்களும் எம் சங்கத்திற்கென்றே தந்தருளுவீர்கள் என்ற என் பூரண நம்பிக்கையையும் வெளிப்படுத்திக் கொள்ளுகிறேன்.

முன் கூறப்பட்ட பொதுக்கூட்டத்தின் தீர்மானப்படி 14-3-1940 வியாழக்கிழமையன்று சங்கத்தின் காரியக்கமிட்டிக் கூட்டம் ஒன்று எம் பள்ளியில் நடந்தேறியது. அவ்வமயம் நம் சங்கத் தலைவர் சங். A. லூர்துசுவாமி B.A., L.T. அவர்கள் தலைமை வகித்தார்கள். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏக மனதுடன் நிறைவேற்றப்பட்டன :—

1. மதுரை, தஞ்சை, சேலம் ஜில்லாக்களிலும் நமது சங்கம் தழைத்தோங்கவேண்டி கீழ்கண்டவர்களையும் காரியக்கமிட்டி அங்கத்தினராகச் சேர்த்து ஆகமொத்தம் 15 அங்கத்தினராக்க வேண்டும்.

ஸ்ரீ. P. அந்தோணி, (Madura.)
,, S. ராமப்பன், (Tanjore.)
,, L. சவரிமுத்து, (Salem.)

2. சங்கத்தின் பற்பல ஒழுங்குகளைத் திட்டம் செய்ய வேண்டியதற்காக ஒரு உப கமிட்டி அமைக்கப்படவேண்டும். அவ்வுப கமிட்டியில் அடியில் கண்ட 6 பேரும் அங்கத்தினராவார்கள்.

(1) தலைவர்.
(2) யாதாமொரு காரியதரிசி.
(3) ஸ்ரீ. T. S. கணபதி அய்யர்.
(4) ,, Y. சூசைமாணிக்கம்.
(5) ,, கிருஷ்ண ரெத்தினம்.
(6) ,, மரியானந்தம் பிள்ளை.

3. **ஆயுள் அங்கத்தினர் :—(Life Member.)** ஆயுள் அங்கத்தினர் கட்டணம் ரூ. 20/-. இதில் முதல் வருஷத்தில் ரூ. 5/- கட்டியாகவேண்டும். பாக்கி ரூ. 15/-தையும் மீதியான 4 வருஷங்களுக்குள் கட்டியாகவேண்டும். ரூ. 20-ம் பூர்த்தியாகக்கட்டியான பிறகுதான் "ஆயுள் அங்கத்தினர்" என்று அழைக்கப்படுவார்கள்.

4. **சங்கத்தின் பரிபாலகர் (Patrons) :—** இப்பள்ளிக்கூடத்தின் பழைய மாணவர் மட்டுமேயன்றி, வேறு எந்தக் கனவானும் இச்சங்கத்தின் பரிபாலகராக உரிமையுண்டு. பரிபாலகருக்கு சங்கத்தின் நபர்களுக்கான சகல உரிமைகளுமுண்டு. இதற்குக் கட்டணம் ரூ. 50/-. இத்தொகையை இரண்டு தவணைகளில் கட்டியாகவேண்டும்.

5. **சங்கத்தின் கௌரவ பரிபாலகர் (Hon. Patrons) :** கௌரவ பரிபாலர்களை சங். தலைவரவர்கள் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

6. **சங்கத்தின் உபகாரிகள் (Benefactors) :—** சங்கத்திற்காக நன்கொடை உதவும் யாவரும் சங்கத்தின் உபகாரிகளாவார்கள்.

7. **பதிவுச் சீட்டு (Enrolment form) :—** புதிதாய்ச் சங்கத்தில் சேருவதற்காக ஒரு புதிய "பதிவுச்சீட்டு" (Enrolment form) தயாரிக்க வேண்டும்.

8. **நடைமுதல் சேலவுக்கான விசேஷ நிதி :—** சங்கத்தின் காகிதம், தபால், பிரசுரித்தல், முதலிய நடைமுதல் செலவுகளுக்காக வேண்டி, பழைய மாணவர் சங்கத்தில் சேரும் நபர்களுடைய பூங்கொத்து சந்தாக்களிலிருந்து ரூ. 1/-க்கு 1 அணு வீதம் ஒதுக்கிவைத்து அதன்மூலம் ஒரு விசேஷ நிதியை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

9. சங்க நிதியை தலைவரவர்கள் வசம் அவர் அபிப்பிராயப்படி ஒப்படைக்கப்படும்.

இறுதியில் தலைவரவர்களுக்கும், குழுமியிருந்த அனைவருக்கும் காரியதரிசியவர்களால் வந்தனங் கூறப்பட்டுக் கூட்டம் இனிது முடிவடைந்தது.

ஆகவே, புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட இப்பழைய மாணவர் சங்கத்தை ஊக்கத்துடன் நடத்துவது பழைய மாணவர் ஒவ்வொருவர் பேரிலும் சுமந்த கடன் என்பதை மறக்கவேண்டாம். பழைய மாணவர் சகலரும் சேர முன்வாருங்கள். இச்சங்கத்தில் சேருவதற்கு யாதொரு பிரத்தியேகக் கட்டணமும் கிடையாது. ஆனால், நமது பாடசாலையின் பத்திரிகையாகிய **போதனவிஷய பூங்கோத்தின்** சந்தாதாரராகச் சேரும் பழைய மாணவர்களுக்கெல்லாம் **பூங்கோத்து** கிடைப்பதோடு **பழைய மாணவர் சங்கத்தின்** சகல சுதந்தரங்களுக்கும் உரிமையுண்டு. இன்னும் ஏனைய பழைய மாணவர்களையும் சங்கத்தில் சேரும்படி தூண்டுங்கள். பற்பல ஜில்லாக்களுக்குப் பிரதிநிதிகளாகச் சென்றிருக்கும் காரியக் கமிட்டி அங்கத்தினர்களே உங்கள் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட இச்சங்க வேலையை ஆர்வத்தோடு செய்யத் துவக்குங்கள். உங்களது ஊக்கத்தாலும், உழைப்பாலும், விடா முயற்சியாலும் நமது பழைய மாணவர் சங்கம் மென்மேலும் விருத்தி யடையுமென்பது திண்ணம். எல்லாம்வல்ல இறைவன் உங்களுடையவும் எங்களுடையவும் நோக்கங்களெல்லாம் சித்தி பெறுமாறு அருள்புரிவாராக.

உபகமிட்டியினர் ஏற்படுத்தும் சங்க ஒழுங்குகள், சமயா சமயம் நடைபெறும் சங்கக்கூட்டங்களின் விவரங்கள், இன்னும் சங்கத்தைச் சார்ந்த விஷயங்கள் எல்லாவற்றையும்பற்றி இனி வெளிவரயிருக்கும் பூங்கொத்து இதழில் பிரசுரம் செய்யப்படும்.

யோசனைக் கணக்குகள் விடை

(கொத்து 30, பக்கம் 209.)

S. Sebastian,

(*Higher grade.*)

(1) சேவல் 13; பெட்டைக்கோழி 15; குஞ்சுகள் 2. (2) மனிதர்கள் 10; பெண்கள் 6; பையன்கள் 84. (3) கொண்டு வந்த பூக்கள் = 111; பூஜைக்கு வைத்த பூக்கள் = 100. (4) கொண்டுவந்த தொகை = ரூ. 1–12–0; ஏழை ஒன்றுக்குக் கொடுத்தது = ரூ. 1–0–0. (5) கோழிகள் = 46; சிறு வாத்துகள் = 44; ஆடுகள் = 10.

182292

ELEMENTS OF ENGLISH GRAMMAR IN TAMIL

(இங்கிலீஷ் இலக்கண நூலாதாரம்)

13th edition, a very useful book for primary classes.

Crown 8vo, 76 pp. Wrapper.
As. 4.

Postage: 0-1-3.

FIRST ENGLISH GRAMMAR

By Rev. J. H. Quinn, S.J. 6th Edition. Treats of English words and of the construction of Sentences written mainly for the use of pupils in the I, II and III Forms.

Crown 8vo, 88 pp. Stiff Cover
As. 5.

Postage: 0-1-6.

Apply to :—

THE SUPERINTENDENT,
St. Joseph's Industrial School Press,
TRICHINOPOLY.

நல்லொழுக்கம்

(By Bishop Roche)

இதில் சுகவழி, அன்னபானம், நித்திரை, நடையுடை பாவனை, உண்மையுடைமை, பேசும் வகை, குடும்பம், பள்ளிக்கூடம், சிநேகம், காகிதம் எழுதும் வகை, உத்தியோகம் இவைகளைச் சார்ந்த விஷயங்கள் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது. இப்புஸ்தகம் எத்திறத்தாருக்கும் விசேஷமாய் பிள்ளைகளுக்கே பிரயோஜனமும் அவசியமுமானது. வெகு காலமாக Middle School-களிலும், Elementary School-களிலும் இவற்றைப் பாடப் புஸ்தகமாக உபயோகித்துவருகிறார்கள்.

(13-ம் பதிப்பு)

82 பக்கங்களடங்கியது அணா 3.

தபாற் செலவு 0-1-3.

திவ்விய சேசுவின் திருச்சரிதை

3-ம் பதிப்பு

96 பக்கங்களடங்கியது

கர்த்தர் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு, உத்தானம், பரலோக ஆரோகணம், திருச்சபை ஸ்தாபகம், அவர் செய்தருளிய புதுமைகள், அளித்தருளிய ஆத்தும சரீர நன்மைகள், அவரது பிரசங்கம், உவமைகள் முதலியவைகளைத் தனித்தனியே ஒவ்வோர் பாடத்தில் விவரித்திருப்பதால் பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவர்களுக்கு பாடப்புத்தகமாக இயற்றியிருக்கிறது. நமது பரிசுத்த ஆண்டவரின் ஜீவிய சரிதையை அறிய விரும்பும் பெரியோர், புதுக்கிறீஸ்துவர், இதர மதஸ்தர் இந்நூலை வாசித்து அபரிமிதமான பலனடைவார்கள். விலை அணா **3.**

தபாற் செலவு 0-1-9.

பங்கிராஸ்

அல்லது
பூர்வீக
சுரங்க
சபை
யின்
விநோத
விர்த்
தாந்தம்

வாசிக்க இனிமை!

பிரக்கியாதிபெற்ற
தமிழ் எழுத்தாளர் சேசு சபை
சந்தியாகப்பர்
சுவாமியார்
இயற்றியது.

தெலீட்டாசு பெரின்பம்

கிறீஸ்துவர்களும், இதர மதஸ்தரும் இதில் அடங்கியுள்ள விநோத விர்த்தாந்தச் சங்கதிகளை வாசித்தால் எல்லோரும் ஆத்மார்த்த பிரயோஜனம் அடைவார்கள். ஆதிகாலத்தில் கிறீஸ்துவர்கள் சத்தியவேதத்தில் எவ்வளவு அபிமானம் உள்ளவர்களாயிருந்தார்களென்றும் அதில் பிரமாணிக்கம் தவறுதிருக்க எவ்வளவு மனத்துணிவோடு துன்ப வேதனைகளுக்கும் கொடிய சாவுக்கும் அஞ்சாமல் வேதசாட்சியான வர்த்தமானங்களை வாசிக்க கல்மனமும் கரையும்.

519 பக்கங்கள் விலை ரூ. 1—8—0.
தபாற் செலவு ரூ. 0—6—0.

திருச்சி அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை
அச்சாபீசில் கிடைக்கும்.

ஸங்கீதம்!

உலகமே ஸங்கீதம். ஸங்கீத உலகில்
சிறுவர் ஸங்கீதமே சிங்கார ஸங்கீதம்.

எலிமெண்டரி பாடசாலைகளில் ஸங்கீதமும் ஓர்
கட்டாய பாடம்

எமது கத்தோலிக்கு "கர்னாடக ஸங்கீத போதினி" 3 பாகங்கள். ஒவ்வொன்றும் தனி விலை அணு 6.

தபாற்செலவு பிரத்தியேகம்.

துரைத்தனத்தார் அங்கீகரித்தவை

முதல் புத்தகம் ஆரம்ப அப்பியாசகர்களுக்கும், ஸங்கீதம் கற்பிக்கும் உபாத்திமார்களுக்கும், 4, 5-ம் வகுப்புகளுக்கு ஸங்கீதப் பாட திட்டப்படி ஸரளி முதலிய வரிசைகள் கற்பிக்க உதவும்.

மதிப்புரை :—சர்வ வியாபி 30th Oct. 1935.... "........இற்றைவரைக்கும் இவைகள்போன்ற புத்தகங்கள் வெளிவந்ததில்லை என்பது நிச்சயம்..........சிறுவர் சிறுமிகட்கும் சங்கீதத்தில் ஈடுபட்டு பயிற்சிசெய்யவேண்டுமென்று ஆசிக்கிற வாலிபர்கட்கும் முக்கியமாக இயற்றப்பட்டது. தற்காலத்தில் யாவரும் வெகு எளிதில் சங்கீதம் படித்துப் பழகும்விதமாய்த் தகுந்தவண்ணம் சுலபமான இராக தாளங்களில் ஸ்வரங்கள் அமைத்து வெகு தெளிவாயும் விரிவாயும் விளக்கப்பட்டிருக்கிறது.

.........கிறீஸ்துவப் பள்ளிக்கூடங்கள் போர்டிங்குகள், கன்னியர் மடங்கள் முதலிய பொதுஸ்தலங்களில் இப் போதினியை ஓர் டெக்ஸ்டு புத்தகமாகப் பாவித்து வழங்குவது ஓர் சிறந்த காரியமாகும்."

இச் சிறந்த சங்கீதத்தை முற்றும் கைக்கொள்ள ஆசிக்கிறவர்கள் இதைப் படிப்பிக்கும் 3 புத்தகங்களையும் வரவழைப்பதே உத்தமம்.

விலாசம் :— A. ஞானதிக்கம்,
தி ஸௌத் இண்டியன் மியூஸிக் ஸ்கூல்,
செயிண்ட் தாமஸ் சேர்ச் ரோடு,
உதகமண்டலம்.
தென் இந்தியா.

புத்தக விளம்பரம்

சென்னை துரைத்தனத்தாரால் எலிமெண்டரி ஸ்கூல்களுக்கு 1939-ம் வருஷம் வெளியிடப்பட்டுள்ள புதியப் பாடத்திட்டத்தை அனுசரித்து தற்கால நவீன முறையில் முதல் ஐந்து வகுப்புகள் வரைக்கும் உபயோகமான தமிழ்-கணக்கு, பூகோளம், இந்துதேச சரித்திரம், தோட்டவேலைகள், ஸிவிக்ஸ் முதலிய புஸ்தகங்கள் என்னால் வெளியிடப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

புஸ்தகங்கள் கத்தோலிக் ஆசிரியர்களைக்கொண்டு தற்கால பாடத்திட்டத்தை அனுசரித்து வெளிவந்துள்ளன. இன்னும் என்னிடம் உயர்தரக் கலாசாலைகளுக்கு கத்தோலிக் ஆசிரியர்களால் எழுதப்பட்ட தமிழ் புஸ்தகங்கள் வெளிவந்து அனேக பள்ளிக்கூடங்களில் பாட புத்தகமாக வைக்கப்பட்டுள்ளன. முதல் மூன்று பாரங்களுக்குரிய சரித்திரம், சைன்ஸ் முதலியனவும் இருக்கின்றன.

புதிய பாடத்திட்டத்தை அனுசரித்து முதல் ஐந்து வகுப்புகளுக்கு எழுதப்பட்ட புஸ்தகங்களின் அட்டவணை

மாணவர் மணிமாலை ஒன்று முதல் ஐந்து வகுப்புகளுக்கு

கணக்கு	மூன்றும் வகுப்பு முதல்		5-ம்	,,
சிவிக்ஸ்	மூன்றும்	,,	5-ம்	,,
தோட்டவேலை	மூன்றும்	,,	5-ம்	,,
சரித்திரம்	மூன்றும்	,,	5-ம்	,,

பூகோளம் 5-ம் வகுப்புக்குரியது.

விபரமான கேட்லாக் வேண்டியவர்களுக்கு அனுப்பப்படும்.

கனம் பள்ளிக்கூட மானேஜர்சுவாமி அவர்களும், ஆசிரியர்களும் என்னுடைய பாடப்புத்தகங்களை தங்கள் தங்கள் பள்ளிக்கூடங்களில் வைத்து கத்தோலிக் பிரசுர கர்த்தாவாகிய என்னை ஆதரிக்கும்படியாக மிகவும் தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

A. V. D. Packiam Pillai,
Educational Publisher,
TUTICORIN.

A. V. D. பாக்கியம் பிள்ளை,
புஸ்தக வியாபாரம்,
தூத்துக்குடி.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.